விலை : 20.00 website : www.valampurii.lk

பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 32 செவ்வாய்க்கிழமை (16.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

## பட்டா ரக வாகனத்தை மோதித் தள்ளியது ஹயஸ்

### பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி இலுப்பைக்கடவை சந்தியில் நேற்று திங்கட்கிழமை மாலை 4.40 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

பொது மகன் ஒருவரும்,வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் அதிகாரி ஒருவரும் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ள மன்னார் பொது வைத்தியசாலை அதிகாரிகள் உயிரிழந்தவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ பிரசன்னம்; பௌத்த மயமாக்கல்!

### அமெ.தூதுவரிடம் யாழ்.சிவில் சமூகம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் கூறுவதை போன்று வடக்கு கிழக்கில் எந்த மாற்றமும் நடைபெறவில்லை. இராணுவ மற்றும் பௌத்த மயமாக்கல்கள் இங்கு தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு தெரியாமல் நடப்பதற்கு சாத்தியமில்லை. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்ப டையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என இலங்கைக்கான அமெ ரிக்க தூதுவர் அதுல் கேசப்பிடம் யாழ்.சிவில் சமூகம் தெரிவித்துள்ளது.


நேற்றைய தினம் யாழ்.நகரில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற கலந்துரையா டலின் போதே யாழ்.சிவில் சமூகத் தினர் மேற்கண்டவாறு கூறியுள் ளனர்.

வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறைப்பு, மக்களுடைய காணிகள் விடுவிப்பு என்றெல்லாம் அரசாங்கம் கூறி வருகின்றது. ஆனால் இங்கு நாளொன்றுக்கு ஒவ்

23ஆம் பக்கம் பார்க்க....

## மீளவும் நாமல் கைது; 22 வரை விளக்கமறியல்

(கொழும்பு)



கறுப்பு பண குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட இரண்டு சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்றுக் காலை வாக்குமூல

24ஆம் பக்கம் பார்க்க....

## வவுனியா பொருளாதார மையத்தை தேக்கவத்தையில் அமைக்க தீர்மானம்



(பரந்தன்)

வவுனியாவுக்கான பொருளாதார மையத்தை வவுனியா தேக்கவத் தையில் அமைப்பதற்கு ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் எம்.

23ஆம் பக்கம் பார்க்க....

## குற்றமிழைத்தவர்களை பாதுகாப்பதே திட்டம்!

(யாழ்ப்பாணம்)

காணாமல்போன அலுவலக சட்டம் குற்றமிழைத்தவர்களை பாதுகாப்பதற்காகவே கொண்டுவ ரப்பட்டுள்ளது என வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங் கிணைப்பாளரும் மற்றும் மனித உரிமை அபிவிருத்திக்குமான சட்ட ஆலோசகர் ஆ. டோமினிக் பிறே மானந்த் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

### தயா மாஸ்டர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள்

## அமெரிக்காவின் பங்களிப்பு தொடர வேண்டும்

### இரா.சம்பந்தன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தேசிய கூட்டமைப்பின் தலைவரும்,

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
வரலாறு - I,II

# வவுனியா பொருளாதார மையத்தை தேக்கவத்தையில் அமைக்க தீர்மானம்



(பரந்தன்)

வவுனியாவுக்கான பொருளாதார மையத்தை வவுனியா தேக்கவத்தையில் அமைப்பதற்கு ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா அரசாங்க அதிபர் எம்.

23 ஆம் பக்கம் பார்க்க....

# குற்றமிழைத்தவர்களை பாதுகாப்பதே திட்டம்!

(யாழ்ப்பாணம்)

காணாமல்போன அலுவலக சட்டம் குற்றமிழைத்தவர்களை பாதுகாப்பதற்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது என வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் மற்றும் மனித உரிமை அபிவிருத்திக்குமான சட்ட ஆலோசகர் ஆ. டோமினிக் பிறேமானந்த் தெரிவித்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## தயா மாஸ்டர் பிணையில் விடுதலை

(கொழும்பு)


பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் வேலாயுதன் தயாநிதி என்ற தயா மாஸ்டர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டார் என்ற குற்றச்

24 ஆம் பக்கம் பார்க்க....

# அமெரிக்காவின் பங்களிப்பு தொடர வேண்டும்

## இரா.சம்பந்தன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு மற்றும் அடிப்படை பிரச்சினைகள் விடயத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு தொடர வேண்டியது மிகவும் அவசியமாகும் என அமெரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அதுல் கேசப்பிடம் தாம் சுட்டிக் காட்டியுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், இலங்கை எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கும், அமெரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான

23 ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)

பரீட்சை

மாதிரி வினாத்தாள்

வரலாறு - I, II

கணிதம் - I



உள்ளே...

# அமெ.தூதுவர் அதுல் கேசப் நேற்று யாழ்.வருகை




23 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**WALK IN INTERVIEW**
**Faculty of Arts**

Walk in interview for appointments to the following posts will be held at the Board Room of this University on the dates and the time indicated against the posts.

**24.08.2016**

- Posts of Temporary Lecturer/Temporary Tutor in Media Studies/Philosophy/Psychology } At 9.30 a.m
- Posts of Temporary Lecturer/Temporary Tutor in Hindu Civilization/Hindu Philosophy/ Translation Studies/Christian Civilization/ Sociology } At 10.30 noon
- Posts of Temporary Lecturer/Temporary Tutor in Tamil/Political Science/Geography/ Economics } At 1.30 p.m

**25.08.2016**

- Posts of Temporary Lecturer/Temporary Tutor/ Temporary Instructor in Fine Arts/Archaeology/ History/Information Communication Technology/ Linguistics } At 9.30 a.m
- Posts of Temporary Lecturer/Temporary Tutor/ Temporary Instructor in Planning/Drama & Theatre Arts/ English Language, Teaching } At 1.30 p.m

Candidates who have the required qualifications are invited for a Walk Interview.

Candidates who are awaiting the results of the Final degree examination are also called upon for the above Walk in Interview.

Interested Candidates with the required qualifications are expected to be present for the interview at time scheduled above with relevant certificates, NIC and self prepared application

**Registrar**
**University of Jaffna**
**15.08.2016**

(C-5460)


# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க அழுத்தங்களை கொடுங்கள்

## அமெ.தூதுவரிடம் சீ.வீ.கே.கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டதத்தின் கீழ் முன்னாள் போராளிகளை மீண்டும்கைது செய்தல் மற்றும் சிறைவைத்தல் போன்ற நடவடிக்கைளை உடனடியாக நிறுத்த அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக்கொடுக்க வேண்டுமென வடமாகாணசபையின்அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வலியுறுத்தியுள்ளார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க் தூதுவர் அதுல் கேசப் நேற்று திங்கட்கிழமை வட மாகாண சபையில் அவைத்தலைவர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் தவராசா உட்பட உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

அந்த சந்திப்பின் போது, பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதாக கூறியிருந்தாலும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக வேறு சட்டத்தினை ஏற்படுத்தினாலும் பரவாயில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முன்னாள் போராளிகளை கைது செய்யும்நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் எமது அரசியல் தா்வு மறுபககத்தில் இருந் தால் கூட தற்போது நடைபெறும சிங்கள குடியேற்றங்கள் மற்றும் விகாரைகள் அமைத்தல் என்பவற்றினை நிறுத்து வதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்.

அத்துடன், ஐ.நா தீர்மானத்திற்கு ஆதரவு அளித்த நாடு அமெரிக்க என்ற வகையில், ஐ.நா சபைக்கு கூறிய உத்தரவாதத்தினை அரசாங்கம்நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியதாக அவைத்தலைவர் தெரிவித்துள்ளார். (செ-4)


**காணி தேவை**

பருத்தித்துறை நகரம், வியாபாரிமூலை, சக்கோட்டை, பொலிகண்டி, இண்பருட்டி பகுதிகளில் வீடு கட்டக்கூடிய சிறிய காணி தேவை.

**T.P :- 0771681697 / 0772105322**

(C-5465)



**திரு.கந்தையா அருந்தவபாலன்**
**அவர்களின்**
**மணி விழா**



இடம் :- தென்மராட்சி கலைமன்றம் (சிவன்கோவிலடி, சாவகச்சேரி)

காலம் :- 17.08.2016 புதன் காலை 9 மணி

தலைவர் :- திரு.க.கனகேஸ்வரன் (பிரதேச செயலர் - மருதங்கேணி)

வரவேற்புரை :- திருமதி தவரூபி பிரபாகரன் (ஆசிரியர் - யா - மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை)

**ஆசியுரைகள் :-**

சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் அவர்கள்
வண. எஸ்.ஜெபநேசன் அடிகளார்
வண. ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் சின்மயமிஷன் யாழ்ப்பாணம்.

"நாயகன் நடந்து வந்த பாதை" - திரு. அ.அகிலதாஸ் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

"அருந்தவம்" மணிவிழா மலர் வெளியீடு - வெளியிட்டு வைப்பவர் :-
கலாநிதி வை.சிவராசா (பிரபல வர்த்தகர் மனித உரிமைப் பணிப்பாளர் - வடமாகாணம்)

மலர் முன்வைப்புரை - திரு. லலீசன் (பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

**வாழ்த்துரைகள் :-**

கௌரவ இரா.சம்பந்தன் பா.உ, (எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கை பாராளு மன்றம் - தலைவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வடமாகாணம்)
கௌரவ மாவை.சேனாதிராஜா பா.உ, (தலைவர் இலங்கை தமிழரசுக்கட்சி)
திரு.நா.வேதநாயகன் (அரச அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்)
சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
சிரேஷ்ட பேராசிரியர் க.கந்தசாமி (பீடாதிபதி, தொழில்நுட்ப பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் வே.ப.சிவநாதன் (முன்னாள் கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.செ.உதயகுமார் (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
திருமதி அ.சாந்தசீலன் (பிரதேச செயலர், தென்மராட்சி)
திரு.சு.கிருஸ்ணகுமார் (வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்)
திரு.மு.நாகேந்திரராஜா (முன்னாள் அதிபர், யாழ்.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

வாழ்த்துக்கவி - கவிஞர் த.நாகேஸ்வரன்

**பாராட்டுரைகள்**

கலாநிதி செ.சேதுராஜா (முன்னாள் அதிபர், யா.நெல்லியடி மத்திய கல்லூரி)
திரு.சு.சி.உதயகுமார் (தலைவர், பொருளியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
திரு.ந.ஜெயகுமாரன் (அதிபர், யாழ்.சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி)
திரு.ந.சர்வேஸ்வரன் (அதிபர் யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
திரு.வ.ஸ்ரீபிரகர் (உப தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

அருந்தவபாலன் அறக்கட்டளை நிதியம் ஆரம்பித்து வைத்தல்.
நன்றியுரை :- திரு.கா.சிவஞானசுந்தரம் (செயலாளர், மணிவிழாக்குழு)

(C-5463)

வாருங்கள் :- மனதார அவரை வாழ்த்துங்கள் :- மாலைகள் பொன்னாடைகளை தவிர்ப்போம் :- அவரின் அறநிதியத்திற்கு உதவுவோம்.



**திருமதி செல்வநாயகியம்மா குமாரையா அவர்களின்**
**அந்தியேட்டிக்கிரியைக்கான அழைப்பு**



16.07.2016 இறைபதமடைந்த எமது தாயாரின் மேற்படி கிரியைகள் 16.08.2016 இன்று கீரிமலையில் நடைபெற்று வீட்டுக்கிரியைகள் நாளை 17.08.2016 அன்று தண்ணீரூற்றிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். மேலும் எமது துயரில் நேரடியாகவும், தொலைபேசி மூலமும் கலந்து ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

(C-5464)



# நாமல் மீண்டும் கைது

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவினரால் நேற்று மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். நாமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமான நிறுவனம் ஊடாக முறைகேடாக கிடைத்த பணத்தில் ஹேலோகோப் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்தமை சம்பந்தமாக நடத்தப்படும் விசாரணைகளுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். தனியார் நிறுவனம் ஒன்றின் 125 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்காக நாமல் ராஜபக்ஷ நேற்று நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சட்டவிரோத மிருகக்காட்சிச்சாலை சிக்கியது

(டிகொழும்பு)

சுற்றுலாத்துறையினரின் பார்வைக்காக சட்டவிரோத மான முறையில் வன விலங்குகளைத் தடுத்துவைத்திருந்த ஒருவரை தம்புள்ள பிரதேசத்தில் வைத்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள் ளனர்.

மேற்படி சட்டவிரோத மிருகக்காட்சிச்சாலை தம்புள்ள பிரதேசத்திலுள்ள கபுவத்தை என்ற இடத்தில் இடம்பெற்று வந்துள்ளது. சீகிரிய வன விலங்குகள் திணைக்கள அதிகாரிகளுக் குக் கிடைத்த தகவலின்படி நேற்று முன்தினம் இம்முற்றுகை இடம்பெற்றுள்ளது.



ஒரு ஹோட்டலின் பின் பகுதியில் இரும்புக் கம்பிகளால் அமைக்கப்பட்ட கூடுகளில் இவை அடைக்கப்பட்டிருந்த வேளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி விலங்குகள் காயமடைந்திருந்ததன் காரணமாக வைத்திய சிகிச்சைக்காக அவற்றை தாம் அடைத்து வைத்திருந்ததாக மேற்படி ஹோட்டல் உரிமையாளர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

முள்ளம்பன்றி, ஆமை போன்ற அரிய உயிரனங்கள் பலவும் இதில் இருந்துள்ளன. (இ-7-10)

## சந்திரிகாவிடம் இழப்பீடு கோத்தபாய கோருவார்

### கம்மன்பில கூறுகிறார்

போருக்காக தாக்குதல் விமானங்களை இறக்குமதி செய்ததில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிதி மோசடி செய்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிட்ட கருத்தால், ஏற்பட்டுள்ள அவப்பெயருக்கு எதிராக இழப்பீடு கோரி, சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



இது குறித்து கோத்தபாய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கோத்தபாய மீதான பீதி காரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒவ்வொரு கதைகளை கூறி வருகிறார்.

எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பாக இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களை விளக்கமறியலில்வைத்துக் கொண்டு, அந்த குற்றத்தையும் கோத்தபாய மீது சுமத்த முயற்சித்து வருகின்றனர்.

சிறையில் உள்ள இராணுவத்தினர் எப்போதும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக எதனையும் கூற மாட்டார்கள்.

அதேபோல், போரில் முக்கால்வாசியை தான் முடிவுக்கு கொண்டு வந்ததாகவும் கால்வாசியையே மகிந்த ராஜபக்ஷ முடிவுக்கு கொண்டு வந்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் கொழும்பில் முக்கால்வாசியை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர், முழுவதுமாக முடிக்கப் போகும், சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷ புலிகளை முற்றாக தோற்கடித்தார்.

மேலும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட புலிகளின் உறுப்பினர்களுக்கு விஷ ஊசி போடப்பட்டுள்ளதாக கூறியுள்ள விக்கிரமபாகு கருணாரட்னவை கைது செய்ய வேண்டும் என்றும் உதய கம்மன்பில கோரியுள்ளார். (இ-7-10)

## ஜனாதிபதி, பிரதமருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பொதுக்கூட்டங்களின் போது இருவரும் ஒரு இடத்தில் நிற்பதை தவிர்க்குமாறும் பாதுகாப்பு பிரிவு தம்மிடம் அறிவுறுத்தியுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்களிடமே இந்த செய்தியை பிரதமர் தெரிவித்திருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்காரணமாகவே ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வில் தான் கலந்து கொள்ளவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதில் கலந்துகொள்ள வேண்டாம் என பாதுகாப்பு பிரிவு தனக்கு அறிவுரை வழங்கியுள்ளதாகவும் பிரதமர் அமைச்சர்களிடம் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7-10)

## வெள்ளத்தில் சிக்கி 100 பேர் பலி!

சூடானில் தொடரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 100 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சூடானிய செம்பிறைச் சங்கம், எதிர்த்திரியாவுடனான சூடானிய எல்லையில் அமைந்துள்ள கஸ்ஸாலா மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் 25 பேர் உயிரிழந்தனர்.

கடந்த இருவாரங்களாக தொடர்ந்த கனமழையால் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், குறைந்தது 100 பேர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, சுமார் 8 ஆயிரம் வீடுகள் அழிவடைந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சூடானில் தொடர்ந்த கனமழையால் கஸ்ஸாலா, சென்னர், தென் கோர்டோஃபன், மேற்கு கோர்டோஃபன் மற்றும் வடக்கு டர்ஃபர் ஆகிய மாநிலங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக, சூடானில் இயங்கிய வரும் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா.வின் ஒருங்கிணைப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (இ-5)

## மதுபானம், சிகரெட் வரிகளை அதிகரிக்க அரசுக்கு அழுத்தம்





(கொழும்பு)

மதுபானம் மற்றும் சிகரெட் ஆகியவற்றிற்கு 90 வீதம் பெறுமதிசேர் வரியை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு பெறுமதிசேர் வரியை அதிகரிப்பதற்கு இப்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஹற்றன் நோர்வூட் பொயிஸ்டன் தோட்டத்தில் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த மக்கள்,

நாட்டின் ஜனாதிபதி, சுகாதார அமைச்சு பெறுமதி சேர் வரியை 90 வீதத்தால் அதிகரிப்பதற்காக கடந்த ஒரு வாரங்களுக்கு முன் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தமை வரவேற்கத்தக்கது.

ஆனால் பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கி வாழும் தோட்ட தொழிலாளர்கள் இப்பெறுமதிசேர் வரியின் ஊடாக பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாக இந்த போராட்டத்தில் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

உணவுப்பொருட்களுக்கான வரியினை குறைத்து மதுபானம் மற்றும் சிகரெட் வரிகளை அதிகரிக்கும் படியும் இதனால் எமக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்றும் இதனை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7-10)

## 'மகிந்த இல்லையேல் நாங்கள் இல்லை' ஜனாதிபதியை மிரட்டும் உறுப்பினர்கள்

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், கட்சியின் ஆண்டு விழாவில் கலந்து கொள்ள மாட்டார்கள் என கூட்டு எதிர்க்கட்சியின் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் கலந்து கொள்ளவுள்ளதால், தாம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

எதிர்வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு விழாவில் கட்சியினரை வரவழைப்பதற்காக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விழாவில் கலந்து கொள்ள செய்யவிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறியுள்ளதாக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் உதேனி அத்துகோரள தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ இன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எந்த வேலையையும் செய்ய முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 2000 உள்ளூராட்சி சபைகளில் பிரதிநிதிகள் கட்சியின் ஆண்டு விழாவில் கலந்து கொள்ள மாட்டார்கள் எனவும் உதேனி அத்துகோரள தெரிவித்துள்ளார். (இ-7-10)

## புகையிரதம் மீது கல்வீச்சு; நால்வருக்கு விளக்கமறியல்

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் புகையிரதம் மீது கல்வீச்சுத்தாக்குதல் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் நேற்று, குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் லங்கா டி ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

புத்தளத்தில் இருந்து கல்கிஸை நோக்கி நேற்று முன்தினம் முற்பகல் பயணித்த புகையிரதம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பயணிகளால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, ரயில்வே பாதுகாப்பு பிரிவினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தொடர்ந்தும் சுற்றிவளைப்பு மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# வலுவான நிலையில் ஆஸி இலங்கையும் போராட்டம்

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கையணி ஒரு விக்கெட் இழப்புக்கு 22 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலிய அணியின் முதலாவது இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை விட இரண்டு ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.




தற்போது களத்தில் திமுத் கருணாரட்ன, கௌஷல் சில்வா ஆகியோர் தலா எட்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டினை மிற்செல் ஸ்டார்க் கைப்பற்றினார்.

முன்னதாக, தமது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 379 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அவ்வணி சார்பாக ஷோர்ன் மார்ஷ் 130 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் 119 ஓட்டங்களையும் மிற்செல் மார்ஷ் 53 ஓட்டங்களையும பெறறனர்.

அவுஸ்திரேலிய அணி முதலாவது விக்கெட்டினை 22 ஓட்டங்களுக்கு இழந்திருந்த நிலையில், இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த ஷோர்ன் மார்ஷ்-ஸ்டீவன் ஸ்மித் ஆகியோர் தமக்கிடையே 246 ஓட்டங்களைப் பகிர்ந்ததன் மூலமே அவுஸ்திரேலிய அணி, இலங்கையணியின் முதலாவது இன்னிங்ஸின் ஓட்ட எண்ணிக்கையை விட 24 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

பந்துவச்சில் இலங்கையணி சார்பாக ரங்கன ஹேரத் 5 விக்கெட்டுகளையும் டில்ருவான பெரேரா 2 விக்கெட்டுகளையும் சுரங்க லக்மால், தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றியிருந்தனர். முன்னதாக இலங்கையணி தமது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது.



தினேஷ் சண்டிமல் 132, தனஞ்சய டி சில்வா 129 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் ஸ்டார்க் 5 விக்கெட்டுகளைவீழ்த்தியிருந்தார். (க)

# பதக்கத்தை வென்ற சீன வீராங்கனைக்கு அதிர்ச்சி

பிரேசிலில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் விளையாட்டு போட்டி அரங்கில் சீன வீராங்கனையிடம் அதே நாட்டை சேர்ந்த வீரர் தனது காதலை தெரிவித்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரியோ நகரில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் விளையாட்டில் சீனாவை சேர்ந்த ஈ ஷி என்ற வீராங்கனை பெண்களுக்கான மூன்று மீற்றர் டைவர் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றார்.




மேலும், இதே நாட்டை சேர்ந்த குயின் கை என்ற வீரர் ஆண்களுக்கான மூன்று மீற்றர் டைவர் போட்டியில் கடந்த வாரம் வெண்கல பதக்கம் வென்றார்.

இந்நிலையில், வீராங்கனைக்கு நேற்று முன்தினம் வெள்ளி பதக்கம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

அப்போது, அரங்கிற்குள் நுழைந்த அந்த வீரர், வீராங்கனையின் முன் மண்டியிட்டு தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனை சற்றும் எதிர்பாராத வீராங்கனை உணர்ச்சிவசப்பட்டு ஆனந்தக் கண்ணீருடன் அவருடைய காதலை ஏற்றுக்கொண்டார்.



இது குறித்து அவர் பேசியபோது, நாங்கள் இருவரும் கடந்த 6 வருடங்களாக பழகி வருகிறோம். ஆனால், இங்கு அவர் திடீரென மோதிரம் கொடுத்து தனது காதலை வெளிப்படுத்துவார் என நான் எதிர்பார்க்கவில்லை என உருக்கமாக பேசியுள்ளார்.

காதலியின் சம்மதம் கிடைத்தவுடன், வீரர் அவருக்கு மோதிரம் அணிவித்து தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

கோடிக்கணக்கானோர் பார்க்கும் ஒரு விளையாட்டு நிகழ்வில் வீரர்களான காதலர் இருவர் தங்களது காதலை பரஸ்பரம் வெளிப்படுத்தி மோதிரம் அணிவித்த சம்பவம் அரங்கில் இருந்தவர்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (க)

# ஒலிம்பிக் அரங்கில் புதிய மைல்கல்லை எட்டி வரலாற்று சாதனை படைத்தது அமெரிக்கா

ஒலிம்பிக் அரங்கில் அமெரிக்கா 1000 தங்கப்பதக்கங்களை வென்று புதிய மைல்கல்லை எட்டி ஒலிம்பிக்கில் வரலாற்று சாதனை படைத்துள்ளது.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் 31ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நடக்கிறது. இதில தொடரந்து அசத்தி வரும் அமெரிக்க வீரர்கள பதக்க மழை பொழிந்து வருகின்றனர்.

பெணகளுக்கான 4x100 மீற்றர் மெட்லே தொடர் நீச்சலில் லில்லி கிங், கேத்லீன் பாகர், சிமோன் மானுல், டானா வால்மெர் ஆகியோர் அடங்கிய அமெரிக்க அணி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது. ஒலிம்பிக் வரலாற்றில் அமெரிக்காவின் 1000ஆவது தங்கப்பதக்கமாக இது அமைந்தது.


இதுவரை 24 தங்கம், 18 வெள்ளி, 17 வெணகலம் என மொத்தமாக 61 பதக்கங்களை குவித்துள்ள அமெரிக்க அணி, தொடர்ந்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.




இதுவரை நடந்துள்ள 31 ஒலிம்பிக் போட்டிகளில், அமெரிக்க அணி மொத்தமாக 1000 தங்கம், 763 வெள்ளி, 674 வெண்கலம் என 2437 பதக்கங்களை குவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# தங்கம் வென்று ஹட்ரிக் சாதனை படைத்த போல்ட்

பெரிதும் எதிர்பாக்கப்பட்ட ஆண்கள் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்காவின் உசேன் போல்ட் 9.81 வினாடிகளில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார்.




ஒலிமபிக் 100 மீற்றர் ஓட்டத்தில் தொடர்ந்து 3 முறை தங்கம் வென்று போல்ட் ஹட்ரிக் சாதனை புரிந்தார்.

ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை 7 தங்கப்பத்க்கங்களை உசேன் போல்ட் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் (9.89 வினாடிகள்) வெள்ளியும், கனடாவின் அன்ட்ரே டி கிரேஸ் (9.91 வினாடிகள்) வெண்கலமும் வென்றனர். மற்றொரு ஜமைக்கா வீரர் யோகன் பிளேக்கிற்கு 4வது இடமே கிடைத்தது. (க)

# இமையாணன் மத்திய வி.கழக உதைபந்தாட்ட அரையிறுதி இன்று

வடமராட்சி கால்பந்தாட்டச்சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ்மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத்தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெறவுள்ளன.





இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.


அதற்கு முன்னர் இடம்பெறும் காட்சிப் போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# விரைவில் இலங்கை-இந்திய வர்த்தக பொருளாதார ஒப்பந்தம்

## இந்திய உயர்ஸ்தானிகர் சின்ஹா தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை - இந்திய வர்த்தக பொருளாதார ஒப்பந்தம் தொடர்பான முதற் கட்ட பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்கிடையிலான இணக்கப்பாட்டின் மூலம் வெற்றியடைந்துள்ளதாகவும் விரைவில் குறித்த ஒப்பந்தத்திற்கான இறுதிக்கட்ட நகர்வுகளும் மேற்கொள் ளப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே சின்ஹா தெரிவித்துள்ளார்.**



மேலும் உலகப் பொருளாதாரத்தில் பலம்பொருந்திய நாடாக உள்ள இந்தியாவின் சாதனைப் பயணங்களை இலங்கையும் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் இந்திய அரசாங்கம் எப்போதும் வழங்க தயாராக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவின் 70 ஆவது சுதந்திரதினமான நேற்று கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார். (இ-7-10)

# யோஷிதவுக்கு சொந்தமான 72.8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அரசுடைமை

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால், கால்டன் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான உரிமை கோர முடியாத மேலும் 572.8 மில்லியன் ரூபா சொத்துக்கள் இருப்பதை பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஒளிப்பரப்பு உபகரணங்களுடன் கூடிய 80 மில்லியன் ரூபா பெறுமதியான நடமாடும் ஒளிப்பரப்பு ட்ரக் வாகனம், லங்கா ஓரிக்ஸ் லீசிங் நிறுவனத்தின் இலக்கம் 2200060234 என்ற கணக்கில் இருக்கும் 6 மில்லியன் ரூபா பணம், அம்பாந்தோட்டை சிறிபோபுர கிராமத்தில் இருக்கும் 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான 0.150 ஹெக்டேயர் நிலம், பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுமாவத்தையில் இலக்கம் 236/1 முகவரியில் இருக்கும் 200 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டடம், 235 மில்லியன் பெறுமதியான கால்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க் தொலைக்காட்சி நிறுவனத்தின் அசையும் அசையா சொத்துக்கள், ஒளிப்பரப்பு கருவிகள், நுகோகொடை ஸ்டென்லி திலக்கரட்ன மாவத்தை, 219/1 என்ற விலாசத்தில் இருக்கும் 65 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டடம் ஆகியன இந்த சொத்துக்களில் அடங்கும்.



மேலும் யோஷித ராஜபக்ஷ தனது பாட்டியின் பெயரில் கல்கிஸை நெல்லிகாவத்தை பகுதியில் கொள்வனவு செய்துள்ள 10 காணிகள், இரத்மலானையில் உள்ள 31.5 பேர்ச்சஸ் காணி, கல்கிஸையில் 5 பேர்ச்சஸ் காணியையும் கொள்வனவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த அனைத்து சொத்துக்களும் அரசுடைமையாக்கப்படும் என கூறப்படுகிறது.

ஏற்கனவே பான் ஏசியா வங்கியின் 312583900111 என்ற வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த உரிமை கோரப்படாத 157.5 மில்லியன் ரூபாவை கடுவலை நீதவான் அரசுடைமையாக்கி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.இந்த பணமும் யோஷித ராஜபக்ஷவிற்கு சொந்தமானது எனக் கூறப்படும் கால்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வேர்க் நிறுவனத்தின் பணம் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7-10)

## இராசி பலன்

16.08.2016

(ஆடி 32, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 5.09 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 1.22மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
இறுதி ஆடிச் செவ்வாய்
பட்டினத்தடிகள் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம், திருவாதிரை<br>காலை 6.58 இற்கு<br>மகர-சந் | | சூரி |
| சந் | | | ராகு<br>சுக்<br>புத |
| | சனி<br>செவ் | | குரு |

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**மேடம்:** தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது,திடீர் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், இறைவழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**கடகம்:** வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரும் வாய்ப்புண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறும், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், அரசியல் ஈடுபாடு கூடும்.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், அரசு வழியில் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** சொல்லை செயலாக்கிக்காட்ட முற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.








இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியன்இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

பிரித்தானிய ஆட்சியில் இருந்து 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இந்தியா தனி சுதந்திர நாடாகியது. குறித்த 70 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் மதத்தலைவர்கள்,அரச அதிகாரிகள்,பொது அமைப்புக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(படங்கள்:-பொ.சோபிகா)

# கல்லுடைக்கும் தொழிலாளர்களின் பாதிப்புக்கு உரிய தீர்வு பெறுதல்

## யாழ். அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

புத்தூர் மேற்கில் ஜே/273 கிராம சேவை அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கிராமத்தில் மொத்தம் 5000 மக்கள் கொண்ட பகுதியில் அனைவரும் கூலித் தொழிலாளர்களாக உள்ளார்கள்.

அதிலும் கல்லுடைத்து விற்பனை செய்து தங்களின் குடும்ப வாழ்வாதாரத்தை தினம் போக்கும் தொழிலாளர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் அரச அதிகாரிகளும் பொலிஸாரும் எம்து மக்களின் தொழிலை நசுக்கும் நோக்கத்தில் கல் ஏற்ற வரும் உழவு இயந்திரம் (மெசின்) டிப்பர் வாகனங்களை மறிக்கின்றார்கள்.

இதனால் உடைத்த கற்களை விற்க முடியாமல் கஷ்டப்படுகின்ற நிலைமை காணப்படுகிறது.

எமது மக்கள் அச்சுவேலி, பத்தமேனி, வளலாய், பலாலி, புத்தூர், சிறுப்பிட்டி, நவக்கிரி ஆகிய கிராமங்களில் உள்ள காணிச்சொந்தக்காரர்களின் அனுமதியுடன் தோட்டங்கள்(விவசாயம்) செய்வதற்கு என்ற நிலத்தை கல் எடுத்து பயன்படுத்திக் கொடுத்து வருகின்றார்கள்.

இதுபோன்று சிறுப்பிட்டி கிராம மக்கள், ஈவினை-கிராம மக்கள் அச்செழு கிராம மக்கள், நவக்கிரி கிராம மக்கள், மயிலங்காடு கிராம மக்கள் என்போரும் இத் தொழில் செய்யும் தொழிலாளர்களாக இன்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை குடும்ப வருமானமாகக் கொண்டுள்ளனர்.

எமது மக்கள் அன்றாட வாழ்வில் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். அன்றாடம் தங்களின் குடும்ப சீவியத்தை நடத்த முடியாமல் உள்ளார்கள். பிள்ளைகளின் கல்வி, உணவு என பல கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர். அது மட்டும் இல்லாமல் மீள்குடியேற்றம் நடைபெற்ற வளலாய் பகுதியில் குடியமர இருக்கும் மக்களின் காணிகள் கல் அடித்து காணிகளை செப்பனிட்டு வரும் நிலையில் கல்ஏற்றவரும் வாகனங்களை மறித்து மக்களுக்கு எதிராக குழப்பத்தை ஏற்புடுத்தி அரச அதிகாரிகளும் பொலிஸாரும் செயற்படுகின்றார்கள்.

எனவே தான் இது விடயமாக தங்களின் மேலான கவனத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு வந்திருக்கின்றோம். உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு பாதிக்கப்பட்ட மக்களாகிய எங்கள் தொழிலாளர்கள் தொடர்ந்தும் கல்லுடைத்து தொழில் செய்வதற்கும் வட பகுதியில் கட்டட ஒப்பந்தக்காரர்கள் கல்லு ஏற்றிச் செல்வதற்கும் அனுமதி ஒழுங்குகளை செய்து வழங்குமாறும் கலைமதி சனசமூக நிலையம் யாழ்.அரச அதிபரிடம் கையளித்த மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ






கல்வி அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டிற்குரிய தமிழ் மொழித்தின விவாதப்போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி தேசிய ரீதியில் முதலிடம் பெற்று தங்கம் வென்றுள்ளது.மேற்படி போட்டியில் ஆ.நவநீதகிருஸ்ணன்,வா.சிவராஜா ஆகியோரின் பயிற்றுவிப்பிலே சிவராஜா விஷாகனன்,பரமேஸ்வரன் தர்சனன்,விக்னேஸ்வரன் சாரங்கன் ஆகியோர் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளனர்.

சுதந்திரத்திற்காக போராடியவர்கள் மூச்சுக்காற்றைப் பணயம் வைத்ததால்

# சுதந்திரக்காற்றை சுவாசிக்கின்றோம்

## யாழ். இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**சுதந்திரத்துக்காக போராடியவர்கள் தமது மூச்சுக் காற்றை பணயம் வைத்ததால் தான் நாம் இன்று சுதந்திர காற்றை சுவாசிக்கிறோம் என யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் 70 ஆவது சுதந்திர நிகழ்வு தின கொண்டாட்டம் நேற்றைய தினம் யாழில் உள்ள இந்திய இல்லத்தில் கொண்டாடப்பட்டது. அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்தியா தனது 70 ஆவது சுதந்திர தினத்தை தனது தூதரகங்கள் உள்ள அனைத்து நாடுகளிலும் கொண்டாடுகின்றது. சுதந்திரம் என்பது நாம் எல்லோரையும் இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு கொண்டுவரும் நாள் தான் இந்த விடுதலை நாள்.

எத்தனையோ சுதந்திர போராட்ட தலைவர்கள், வீரர்கள்,தொண்டர்கள் தமது மூச்சுக்காற்றை பணயம் வைத்ததால்தான் இன்று நாம் எல்லோரும் சுதந்திர காற்றை சுவர்சிக்க முடிகிறது. சுதந்திரம் என்பது வெறும் வார்த்தை அல்ல அது நமக்கு கிடைத்த பெரிய அடையாளம், அது ஒரு சரித்திரம்.

எத்தனையோ போராட்ட தலைவர்கள், வீரர்கள் இருக்கிறார்கள். உயிரை பணயம் வைத்தார்கள்.இந்தியாவின் தமிழகத்தை எடுத்து கொண்டால் தமிழரின் பண்பு ஏராளம். அதிலும் திருநெல்வேலி மாவட்டம் இல்லை என்றால் சுதந்திரம் கிடைத்திருப்பது கடினம். நானும் அந்த மாவட்டத்தை சேர்ந்தவன்தான். ஆகையால் பெருமையாக நினைக்கிறேன்.

இந்திய அரசு குறிப்பாக வடமாகாணத்தில் சில திட்டங்களை வகுத்து அதி வேகமான வேலைகள் நடைபெறுகின்றன. அந்த வகையில் மன்னார் மாவட்ட திருக்கேதீஸ்வர வேலைகள் நடைபெறுகின்றன. இந்த வருட இறுதிக்குள் அந்த வேலைகள் நிறைவடைந்து அடுத்த வருட ஆரம்பத்தில் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெறும்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான கலாசார மண்டபம் அமைக்கப்படவுள்ளது. மேலும் கடற்றொழிலாளர்களுக்கு பல உதவிகளை செய்து வருகிறோம். அந்த வகையில் இம்முறை முல்லைத்தீவில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு படகுகள் வழங்கவுள்ளோம்.



மேலும் நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இந்தியா வில் இருந்து 11 பேர் கொண்ட பரதநாட்டிய குழு ஊடாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி சங்கிலியன் பூங்காவில் நடன நிகழ்வொன்றை நடத்தவுள்ளோம். அதனை தொடர்ந்து நெடுந்தீவுப்பகுதியில் 2 ஆம் திகதி நடத்தவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# சண்டிலிப்பாய் முதியவர்கள் 60 பேர் இன்று தென்னிலங்கைக்குப் பயணம்

(நல்லூர்)

சண்டிலிப்பாய் பிரதேச மட்ட முதியோர் சங்கங்களின் உறுப்பினர்கள் 60 பேர் இன்று செவ்வாய்க்கிழமை 5 நாள் பயணமாக தென்னிலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் தென்னிலங்கையிலுள்ள முதியோர் சங்கங்களின் முதியோர்களை சந்தித்து பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் சென்று தரிசிக்கவுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்ட முதியோர் இல்ல முதியவர்களையும் சந்திக்கவுள்ளனர் என்று சண்டிலிப்பாய் பிரதேச மட்ட முதியோர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-3-134)

# இலங்கையைச் சேர்ந்த பலர் தீவிரவாதிகளுடன் இணைவு

## பாதுகாப்புச் செயலாளர் தகவல்

இலங்கையில் ஐ.எஸ்.பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக சர்வதேச நாடுகளின் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, கடந்த சில மாதங்களுக்கு முன்இலங்கையைச்சேர்ந்த 45 பேர்இரகசியமாக சிரியாவை அடைந்துள்ளனர் எனவும் இதில் பலர் ஐ.எஸ். இல் இணைந்திருப்பதாகவும் தொடர்ச்சியாக ஐ.எஸ். இன் ஊடுருவல் இலங்கையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியிடம் வினவிய போது,

பயங்கரவாத சூழலில் இருந்து விடுபட்ட எமது நாட்டில் மீண்டும் எந்த வகையிலேனும் அச்சுறுத்தல் ஏற்படுவதை மக்கள் எவரும் விரும்பப்போவதில்லை.

அதேபோல் எமது பாதுகாப்பு தரப்பினருக்கு பயங்கரவாத சூழல் தொடர்பில் அனுபவம் உள்ளது.

ஆகவே நிலைமைகளை சரியாக கையாள முடியும். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையைச் சேர்ந்த 45 பேர் இரகசியமாக சிரியாவை சென்றடைந்துள்ளனர். அவர்களில் பலர் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் இணைந்துள்ளதாகவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. அதில் இருந்து தொடர்ச்சியாக ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் ஊடுருவல் இலங்கையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறு இருப்பினும் எமது பாதுகாப்பு எப்போதும் பலமாகவே இருக்கும் என அவர் தெரிவித்தார்.

இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தகவல் தருகையில்,

மேற்கத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஐ.எஸ். பயங்கரவாத செயற்பாடுகள் அதிகரித்து வருவதைப்போல இன்று தற்போது ஆசிய நாடுகளிலும் பயங்கரவாதம் தீவிரமடைந்து வருகின்றது. இஸ்லாமிய பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இலங்கையில் அவ்வாறு எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

எமது புலனாய்வுப் பிரிவினர் மிகவும் துல்லியமாக இந்த விடயங்கள் தொடர்பில் அவதானித்து வருகின்றனர்.

அது தவிர்ந்து எமது பாதுகாப்பு நடவடிக்கள் பலமாகவே உள்ளன என மேலும் தெரிவித்தார். (இ)


## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் (கோப்பாய் பெற்றோல் செற்றுக்கு முன்பாக) 3 1/2 பரப்பு காணிக்குள் அழகிய வீட்டுடன் பயன்தரு மரங்களும் உண்டு.

உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

0771041151, 0766571899

(5583)


# மகிந்தவுக்கு அதிகரித்துள்ள வெளிநாட்டு அழைப்புக்கள்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஆண்டின் இறுதிக்குள் மேலும் பல வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளதாக தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, இத்தாலி, ஆஸ்திரியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நார்டுகளில் வாழும் இலங்கையர்களின் அமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கைகளை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த விஜயத்துக்கான, மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அனைத்துச் செலவுகளையும் அந்தந்த நாட்டில் வாழும் இலங்கையர்கள் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இந்த விஜயத்தின் போது கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## டெங்கால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்வு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்வடைந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 34, 500 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட சமூக வைத்திய நிபுணர் பிரஸிலா சமரவீர தெரிவித்தார்.

கடந்த வருடம் 29,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியதாகவும், அதனுடன்ஒப்பிடும்போது இந்த வருடம் அதிகரிப்பு காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, காலி, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அதிகளவானவர்கள் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குநோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. எனவே, டெங்கு நோய் பரவும் இடங்களை துப்புரவு செய்து நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறும் தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7-10)

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 02
ஆதன இல: 60 (புதிய பதிவு)
வீதி :சுதுமலை வீதி
கிராம சேவையாளர் பிரிவு: J/129 சுதுமலை

வட்டாரம் 02, சுதுமலை வீதி, ஆதன இல. 60 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "மல்போதன் சீமா" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 குளி 17.73 கொண்ட இவ்வாதனம் யாழ்ப்பாணம், தற்போது லண்டனில் வசிக்கும் Dr.சோமசுந்தரம் பஞ்சாட்சரமும் பெண் ஞானேஸ்வரியுமாகிய இவர்களால் இவர்களின் தத்துவக்காரி தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை சேர்ந்த நந்தகுமாரன் நளாயினி மூலம் மதவடி லேன், சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சடாச்சரம் ஐங்கரன் பெண் அனுஷா என்பவர்களுக்கு அறுதி உறுதிமூலம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ச.இளங்கோவன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6210 ஆம் இலக்க 18.03.2011ம் திகதிய அறுதி உறுதிமூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. K.பரமேஸ்வரன் அவர்களால் வரையப்பட்ட 168/2010 ஆம் இலக்க 2010.09.04ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "மல்போதன் சீமா" நிலப்பரப்பு 04 குளி 17.73 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகை பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்துமூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சடாச்சரம் ஐங்கரன் பெண் அனுஷா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை ஏடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

(5623)


## பதவி வெற்றிடம்

கொழும்பு 13 இல் இயங்கி வரும் எமது சட்டலைட்/கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.

- களஞ்சிய காப்பாளர்
- கணக்குப்பிள்ளை,
- டிஸ் ஆன்டெனா பொருத்துநர்கள்,
- எலக்ட்ரானிக் ரிப்பேர் செய்யக்கூடிய technicians,
- எலெக்ட்ரானிக் பொருட்கள்
- விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர்கள்,
- வான் சாரதி/ ஆட்டோ சாரதி

திறமைக்கு ஏற்ப சம்பளம் ரூபாய் 20,000/- இருந்து, 50,000/- வரை கிடைக்கும். தேவையாயின் உணவு, தங்குமிடம் கிடைக்கும். வயது வரம்பு கிடையாது. முன் அனுபவம், மொழியறிவு, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன மேலதிக திறமையாக கணிக்கப்புடும்.

உடன் தொடர்பு கொள்ளவும்
SATS -TECH ENGINEERS (PVT) LTD
51/102, WOLFENDHAL STREET
COLOMBO- 13
CONTACT. 077 771 0785

(C-5413)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:10 3/4செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4903 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 31சூரிசெவ் இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ அரசதொழில்<br>தொ.இ: G/680 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 11<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:ICT/ஆசிரியர்<br>தொ.இ: B/4908 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BSc, MBA/ அரசதொழில்<br>தொ.இ: G/681 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில் நோர்வே குடியுரிமை<br>தொ.இ: B/4918 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவேலி<br>கி.பா: 12செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/686 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 31செவ் 12 இல்.<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:Diploma/ ஆசிரியர்<br>தொ.இ: B/4923 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 19 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:B.COM, HNDA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/719 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# 2 இலட்சத்து 77 ஆயிரம் காணி முறைப்பாடுகளில் 12 ஆயிரத்து 863 முறைப்பாடுகளுக்கு மட்டும் தீர்வு

(முல்லாவி)

வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட யாழ்ப்பாணம் , கிளிநொச்சி,முல்லைத்தீவு மன்னார் வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலும் கடந்த 2013 - 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இரண்டு இலட்சத்து 77 ஆயிரத்து 212 காணி முறைப்பாடுகளில் பொது மக்களால் முன்வைக்கப்பட்ட நிலையில் 12 ஆயிரத்து 863 காணிப் பிரச்சினைகளுக்கே தீர்வு காணப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற அவைத் தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வடபகுதி பொது மக்களினால் 2013-2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட காணிகள் தொடர்பான முறைப்பாடுகளில் யாழ்ப்பாணத்தில் 8 ஆயிரத்து 479 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 975 முறைப்பாடுகளுக்கே தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 46 ஆயிரத்து 218 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட போதும் 3 ஆயிரத்து 758 முறைப்பாடுகளுக்கே தீர்வு காணப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 63 ஆயிரத்து 462 காணி முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 6 ஆயிரத்து 490 பிரச்சினைகளுக்கே தீர்வு காணப்பட்டுள்ளது.மன்னார் மாவட்டத்திலிருந்து 26 ஆயிரத்து 779 காணி தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போதிலும் ஆயிரத்து 320 முறைப்பாடுகளுக்கே தீர்வு எட்டப்பட் டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலிருந்து அதி கூடிய காணிப்பிரச்சினைகளாக ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 274 பிரச்சினைகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 320 முறைப்பாடுகளுக்கே தீர்வு காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)




# நிர்வாகத்தெரிவும் பொதுக்கூட்டமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் தலைவராக கி.சின்னராசா, செயலாளராக சி.ஜீவநாயகம், பொருளாளராக வை.வைகுந்தன், உப தலைவராக ச.மோகனபவன், உப செயலாளராக ச.இராசரட்ணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 6 பேர் தெரிவாகினர்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் சங்கத்துக்கான யாப்பு அங்கீகரிக்கப்பட்டதுடன் நோயாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வைத்தியசாலை நிலைமைகள் ஆகியவை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் நோயாளர் நலன்புரி சங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பிலும் பொதுச்சேவை உறுப்பினர்கள் தமது ஆலோசனைகளை முன்வைக்குமாறும் கோரப்பட்டதுடன் இச் சங்கத்தை சமூக சேவைகள் திணைக்களத்தினால் விரைவாக பதிவை மேற்கொள்ள வேண்டும் எனும் தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது. (2)

# மருத்துவச் சான்றிதழ் வழங்கல்

(கிளிநொச்சி -1)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வீட்டுத்திட்டம், வாழ்வாதார உதவித்திட்டங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மாற்றுவலு, உள்ளோருக்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காலை 9.30 மணியிலிருந்து வழங்கப்படும்.

எனவே பளை பகுதியைச் சேர்ந்த உதவித் திட்டங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மாற்றுவலுவுள்ளோர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ம.ஜெயராஜா தெரிவித்துள்ளார். (2-277)

## செஞ்சோலைப்படுகொலை

# தமிழர் தாயகம் கண்ட வரலாற்றுப் பெருந்துயர்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கவலை

(பனிக்கன்குளம்)

செஞ்சோலைப் படுகொலை தமிழர் தாயகம் கண்ட வரலாற்றுப் பெருந்துயர் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இப்படுகொலையும் இதற்கான நீதி மறுப்பும் மனிதத்தின் அழுக்கான அடையாளங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அந்தக்கொடுந்துயர் நேர்ந்து நேற்று முன்தினம் பத்தாண்டுகள் நிறைவுற்ற நிலையில் அந்த நாளை அதிர்ச்சியோடும் ஆற்றாமையோடும் எம்மக்கள் நினைத்துப் பார்க் கின்றனர்.

இந்த மண்ணில் எம் பிள்ளைகள் கல்வியில் நிமிர்ந்து நிற்பதுவே, அன்று அங்கே இடிக்கப்பட்ட எங்கள் தேசத்து தூண்களுக்கான சரியான நினைவஞ்சலியாக இருக்கும்.

அறமில்லாது அழிக்கப்பட்ட அந்தப் பிஞ்சுகளின் நினைவில் தமிழ்மண் என்றும் தன்னை நிலையாக இணைத்து வைத்திருக்கும் என்றார். (2-281)

## இரவு பகலாக இராணுவ முகாம் முன்பாக அமர்ந்து

# பரவிப்பாஞ்சான் காணி உரிமையாளர்களின் அகிம்சை போராட்டம் நேற்றும் தொடர்ந்தது





கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் இராணுவத்தினர் வசம் உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் எவ்வித உறுதி மொழிகளும் வழங்கப்படாத நிலையில் மூன்றாவது நாளான நேற்றும் தொடர்கின்றது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு முன்பாக குறித்த போராட்டம் இரவு பகலாக இடம்பெற்று வருவதுடன், போராட்டத்தில் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் எனப் பலர் ஈடுபட்டு வருகின்றனர். மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு எவ்வித உறுதி மொழிகளும் வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தமது காணிகள் விடுவிக்கப்படும் வரை போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் நிலை தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களை ஆயுத முனையில் அச்சுறுத்தும் செயற்பாட்டில் இராணுவம் ஈடுபட்டதாக தெரிவித்து ஊடகவியலாளர்களால் இரவு 10 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது,

குறித்த பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமக்கு பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கும் மக்கள், இரவு நேரங்களில் குறித்த பகுதியில் ஒளிரும் மின் விளக்குகளை அணைத்து அச்சுறுத்தும் வகையில் இராணுவம் செயற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். ( 2-15 )

# நிரந்தரமாக செயலாளர் நியமிக்காமையால் அனுமதி கடிதம் பெறமுடியாது அவதி

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் செயலாளர் பதவிக்கு பல மாதங்கள் கடந்த நிலையிலும் வெற்றிடம் நிரப்பப்படாமையால் பிரதேச சபையின் அனுமதிக் கடிதங்கள் பெறுவது தொடக்கம் பிரதேசத்துக்கான அபிவிருத்திகள் வரை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்கள் காணப்பட்டுள்ளதாக பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையானது 167.7 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்டுள்ளதுடன் இங்குள்ள 18 கிராம சேவையாளர் பிரிவுகளில் 3708 குடும்பங்களைச் சேர்ந்த 12143 அங்கத்தவர்கள் இடப் பெயர்வின் பின்னர் மீள்குடியேறி வருகின்றனர். இந் நிலையில் இறுதிப் போரின் போது பல்வேறு இழப்புக்களை சந்தித்த மேற்படி பிரதேசமானது அபிவிருத்திகளை அடையாதுள்ளதுடன் குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளை பிரதேச சபையின் ஊடாக நிறைவேற்றிக் கொள்வதிலும் செயலாளர் வெற்றிடம் நிரப்பப்படாமையால் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாக பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தை கவனத்தில் எடுத்து பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கு செயலாளர் ஒருவரை நிரந்தரமாக நியமித்துத் தருமாறு கோரிக்கை ஒன்றை பாதிக்கப்பட்ட மக்கள் முன்வைத்துள்ளனர். (2-15)





ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பணியாளர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் ஏனைய கிளைகளின் அனைத்து உத்தியோகத்தர்கள் இணைந்து நேற்றுக் காலை பிரதேச வளாகத்தினை சிரமதான பணி மூலம் துப்புரவு செய்ததைப் .படங்களில் காணலாம்.
(படங்கள் :- முள்ளியவளை செய்தியாளர்)



மன்னார் மருதமடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாதத் திருவிழா கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் மடு அன்னையின் திருச்சொரூபம் பவனி வருதை படங்களில் காணலாம். (படங்கள்:எஸ்.சுரேன்)

# தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தினூடாக பழமரச் செய்கை கிராமங்கள் தெரிவு

கிளிநொச்சி பிரதி விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் பழமரச்செய்கையை விஸ்தரிக்கும் முகமாக தேசிய உணவு உற்பத்தித்திட்டம் 2016 ஊடாக உருத்திரபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பழமரக் கிராமங்களாக சிவநகர், உருத்திரபுரம், கிழக்கு உருத்திரபுரம், மேற்கு சக்திபுரம் அத்துடன் புதுமுறிப்பு, விவசாயப் போதனாசிரியர் பிரிவின் கீழ் புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாமரச்செய்கைக்காக ஊற்றுப்புலம், சிவநகர், உருத்திரபுரம் கிழக்கு ஆகிய இடங்களில் இருந்து தலா 90 பயனாளிகளும் தேசிச் செய்கைக்காக சிவநகர், உருத்திரபுரம் மேற்கு சக்திபுரம் ஆகிய இடங்களிலிருந்து தலா 20 பயனாளிகளும் பப்பாசிச்செய்கைக்காக புதுமுறிப்பிலிருந்து 20 பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நீர்ப்பாசன வசதியுள்ள வேலி அடைக்கப்பட்ட இரண்டு பரப்புக்காணியுடன் பழப் பயிர்ச்செய்கையில் ஆர்வமுள்ளவர்கள் புதுமுறிப்பு உருத்திரபுரம் விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாயப்போதனாசிரியர் ம.மகிலன் அறியத்தந்துள்ளார். (2-254)




# கிளிநொச்சியில் இலவச குறும்படம், புகைப்பட பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவினரால் ஆறு மாதங்கள் கொண்ட முழுநேர பயிற்சி நெறியாக குறும்படம் மற்றும் புகைப்பட ப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தர் கு. றஜீவன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பயிற்சி நெறிக்கு முழுநேர பயிற்சிக்கு இருபது மாணவர்களும் பகுதிநேர பயிற்சிக்கு இருபது மாணவர்களும் முதற்கட்டமாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முற்றிலும் இலவசமாக ஆறு மாதங்களுக்கு இந்திய மற்றும் உள்ளூர் வளவாளர்களால் பயிற்சிகள் அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. வடக்கு மாகாணத்தில் முதன்முதலாக ஒரு பிரதேச செயலகத்தில் இவ்வாறான பயிற்சி ஆரம்பிக்கப்படுவது இதுவே முதல்தடவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான முழுமையான நிதி அனுசரணையை வேல்ட் விசன் நிறுவனம் வழங்கியிருக்கிறது. அத்தோடு காவேரி கலாமன்றமும் இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது.

இன்றைய இந்த ஆரம்ப நிகழ்வில் கரைச்சி பிரதேச உதவி பிரதேச செயலர் சிவகாமி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் அருட்செல்வன், வேல்ட்விசன் நிறுவன அதிகாரி, மற்றும் கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2-312)



கடந்த 2006 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 14 ஆம் திகதி வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப்படை நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதலில் பலியான மாணவிகளின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை நேற்று நண்பகல் 12 மணிக்கு வள்ளிபுனம் நடனமிட்டான் பிள்ளையார் ஆலயத்தில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்த ஆத்மா சாந்தி பிரார்த்தனையில் தமது உறவுகளை இழந்த பெற்றோர், உறவினர்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)




வவுனியா,செட்டிக்குளம்,கிறிஸ்தவ குளம் கிராமத்தில் அமைந்துள்ள வயற்கிண றொன்றில் தாய் யானையொன்றும் அதன் மூன்று குட்டிகளும் தவறி விழுந்துள்ள நிலையில் அதில் ஒரு குட்டியானை இறந் துள்ளது. சுமார் 20 அடி ஆழமான இந்தக் கிணற்றுக்குள் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமையன்று இரவு இந்த யானைகள் விழுந்துள்ளன என்று வன இலாகா அதிகாரிகள் கூறினர். (2)

# முழுநிலவுக் கலைவிழா

பரந்தாமன் கவின்கலைக் கல்லூரிக் குழுமத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக்கல்லூரியும் யோகர் சுவாமிகள் நற்பணி மன்றமும் காவேரி கலாமன்றமும் இணைந்து நடத்தும் மாதாந்த **முழு நிலவுக் கலைவிழா** நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு இல.09, இரண்டாம் குறுக்குத் தெரு, கனகபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள கல்லூரி வளாகத்தில் கல்லூரி மதியுரை அவை உறுப்பினர் மு.தவராசா தலைமை யில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக இலங்கை வங்கியின் மேலாளர் கு.சிவஞான சுந்தரம், கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் நா.சோதிநாதன், மூத்த நாடகக் கலைஞர் தே.தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் **நிலவின் முற்றம் பாகம் 03** எனும் இறு வெட்டு வெளியீடு, இசைப்பாடல் போட்டித் தொடர் -04, கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சோலைநகர் கிரா. அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும்

## சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் உறுதி



(புதுமுறிப்பு)

கிளிநொச்சி புதுமுறிப்பு சோலைநகர் கிராமத்தின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்து தரப்படும் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். புதுமுறிப்பு சோலைநகர் சேரமான் முன்பள்ளியில் நேற்றையதினம் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர், வீதி புனரமைப்பு தொடர்பாகவும் மின்சாரம் வழங்குவது தொடர்பாகவும் இக் கிராமத்தின் பேருந்து சேவை போன்ற அத்தியாவசிய சேவைகள் பூர்த்தி செய்து தரும்படி கோரியிருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், கே.என் .39 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட கிராமத்தை வெகு விரைவில் மாதிரிக்கிராமமாக மாற்றுவேன். இங்கு வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய சகல நடவடிக்கைகளையும் விரைவாக மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மின்சார சபையிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மின்சாரம் வழங்குவது தொடர்பாகவும் உரையாடினார். இக்கிராமத்தில் உள்ள ஆலயத்தை பதிவு செய்ததுடன் புனரமைப்புக்காக 50 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இக்கிராமத்தில் வாழ்வாதார உதவிகள் பெறாத குடும்பங்களுக்கு விரைவில் உதவிகள் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், சோலைநகர் கிராம அமைப்பாளர் மற்றும் சமூக மட்டக்குழு அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-307)

# சேவையை பாராட்டி 'சாம ஸ்ரீ தேசமானிய' உயர் விருது



கலாசார, சமய, சமூகசேவை ஊடாக சமூக நல்லுறவையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவதற்கு பாடுபட்டவர் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் எமது இல்லத்தின் தந்தையுமான தி.இராசநாயகத்தின் மகத்தான சேவையைப் பாராட்டி மன்னாரில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் "சாம ஸ்ரீ தேசமானிய" எனும் உயர் விருது கடந்த 13 ஆம் திகதி அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் வழங்கப்பட்டது. (2)

# அடுத்த வரவு - செலவுத்திட்டம் மகிந்தவின் தலைமையில்

## நாமல் நம்பிக்கை

(கொழும்பு)

**நாட்டின் அடுத்த வரவு -செலவுத் திட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்படு மென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**



நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தின் அபிவிருத்திகளை தேடிப் பார்க்காத இந்த அரசாங்கம் கடந்த கால ஆட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக தேடிப் பார்ப்பதற்கு பணத்தையும் நேரத்தையும் வீணாக்குகின்றது.

இந்த நிலையில் மகிந்தவின் குடும்பத்தினரையும், எங்கள் செயற்பாடுகளையும் எப்.சீ.ஐ.டீ என்ற ஜனாதிபதி ஆணைக்குழுவினர் கோடிக் கணக்கில் பணத்தை செலவு செய்து ஆராய்ந்து வருகின்றனர். ஆனால் நாட்டில் எந்தவொரு அபிவிருத்தியையும் இது வரை முன்னெடுக்கவில்லை.

ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் இயங்கும் எப்.சீ.ஐ.டீ காரியாலயத்திற்கு சென்றால் அங்குள்ள அனைத்து அறைகளிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப் படங்களே காட்சியளிக்கின்றன.

இது ஜனாதிபதியின் பொலிஸ் பிரிவு என்பதாலா? என பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

கினிகத்தேனை ரஞ்சுராவ பிரதேசத்தில் அமைந்துள்ள பீடாஸ் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

இந்த சந்திப்பில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.பீ. ரத்நாயக்க, அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எலப்பிரிய நந்தராஜ், தலவாக்கலை லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் அசோக சேபால மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ,

மாகாண மற்றும் மாவட்டங்கள் ரீதியாகவும், பிரதேசங்கள் ரீதியாகவும் எதிர்வரும் காலத்தில் புதிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கென அங்குள்ள அமைப்பாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரை உள்ளடக்கி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நாட்டில் அடுத்த வரவு செலவு திட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை எனத் தெரிவித்தார்.

நாட்டில் யுத்த காலத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கா விசாரணைகளை மேற்கொள்ள இன்றைய அரசு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது.

இந்த வகையில் நமது நாட்டு இராணுவத்தினரை இந்த அரசாங்கம் காட்டிக் கொடுக்க செயற்படுகின்றது. ஆனால் எமது அரசாங்கத்தில் வெளிநாட்டு நடவடிக்கைகளை நம் நாட்டில் உள்வாங்குவதற்கு இடமளிக்கவில்லை.

இந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர் மட்டுமன்றி கடந்த ஆட்சியில் உள்ள அனைவரும் நிம்மதி இன்றி நித்திரை கொள்ளும் நிலைக்கு அரசாங்க செயற்பாடுகள் காணப்படுகின்றன.

கினிகத்தேனையிலிருந்து கொழும்புக்குச் சென்று நேரடியாக வெலிக்கடை சிறைச்சாலைக்கு செல்லும் நிலையிலேயே அரசாங்கம் எம் மீது திணிக்கின்றது.

பாதயாத்திரையின் போது எமது கோரிக்கைகளை மக்களோடு இணைந்து கோஷம் இட்டுக் கொண்டு இருக்கையில் கைது செய்து சிறையில் அடைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்தது.

அவர்கள் நினைத்தவாறு என்னை சிறைக்கு அனுப்பினர். இது அல்ல அரசாங்கத்தின் வேலை. மக்களுடைய அபிவிருத்தி தொடர்பில் ஆராய்ந்து மக்கள் சேவையை முன்னெடுக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை கைப்பற்றினால் உலக நாடுகள் நிதி உதவிகளை செய்வார்கள் என்ற நிலை இருந்தது. ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கே கூடிய அளவில் அபிவிருத்திக்கான நிதி வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சிவனொளிபாதமலை காட்டுப்பகுதியில் மரையை வேட்டையாடிய மூவர் கைது

சிவனொளிபாதமலை காட்டுப்பகுதியில் மரை ஒன்றை வேட்டையாடி அதனை இறைச்சியாக்கி தம்வசம் 30 கிலோ இறைச்சியை வைத்திருந்த 3 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் மஸ்கெலிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மஸ்கெலிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்மோர் தோட்டத்தின் போட்மோர் பிரிவை சேர்ந்தவர்களாவர்.

இவர்களை பொலிஸ் விசாரணையின் பின் அட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை வேட்டையாடப்பட்ட மரை தொடர்பாக அதன் இறைச்சி பகுதிகளை கால்நடை சுகாதார பிரிவின் வைத்திய பரிசோதனைக்காக ஒப்படைக்கப்படவுள்ளதாக மஸ்கெலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை இது தொடர்பில் மேலும் பல சந்தேக நபர்களை தேடி வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்ததோடு மேலதிக விசாரணைகளையும்மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

## கைத்தொழில் பேட்டைக்கான முன்மாதிரியை சீனாவில் பெற்றோம்




இலங்கையில் அமைப்பதற்கு உத்தேசித்துள்ள கைத்தொழில் பேட்டைக்கு தேவையான பல பாரிய முன்மாதிரிகளை சீனாவின் சொங்சி மாநகரிலுள்ள பானன் சுக்ஆன் கைத்தொழில் பேட்டையில் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்ததாக மாநகர அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன்சீனாவுக்கு ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் அங்குள்ள கைத்தொழில் பேட்டையைப் பார்வையிட்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்களான ரூபி, சபயார் போன்றவற்றின் பெறுமதியைக் கூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் "பானன் சுக்ஆன்" முகாமைத்துவ அதிகாரி அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த பானன் சுக்ஆன் கைத்தொழில் பேட்டையுடன் இலங்கை உறவுகளை பலப்படுத்திக் கொள்வது இலங்கையின் கைத்தொழில் நடவடிக்கைகளை வினைத்திறனுள்ளதாக மாற்றிக் கொள்வதற்கு வழிவகுக்கும் எனவும் அமைச்சர் சம்பிக்க நம்பிக்கை வெளியிட்டார். (இ-7-10)

# தலைசுற்றல் உணர்த்தும் நோயின் அறிகுறிகள்



நன்றாகத்தான் இருப்பீர்கள். திடீரென தலை சுற்றுவது போலிருக்கும். கை நடுங்கும். கண்கள் இருட்டிக் கொண்டு வரும். இது நிறையப் பேர் அனுபவித்திருப்பார்கள். இதற்கு பல காரணங்களை சொல்லலாம்.

குறைந்த இரத்த அழுத்தத்திலிருந்து ஓமோன் மாற்றங்கள் வரை எதுவாகவும் இருக்கலாம்.

சிலருக்கு கண்கள் இருட்டிக் கொண்டு காது அடைப்பது போல ஏற்படும். சில நிமிடங்களில் சரியாகிவிடும். இதற்கு வெர்டிகோ என்று பெயர். இது மெனோபாஸ் சமயங்களில் பெண்களுக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு.

இன்னும் சிலருக்கு தலை சுற்றும். காது அடைக்கும். இதயம் படபடவென அடைத்துக் கொள்ளும். பேச்சு திடீரென குளறும். இதற்கு ஒவ்வாமை காரணமாக இருக்கலாம்.

அல்லது காதுகளில் உண்டாகும் சம நிலையற்ற நிலையில் இவ்வாறு உண்டாகலாம். இன்னும் தீவிரமான நிலை என்னவென்றால் தலை சுற்றி சுய நினைவு இழப்பது. திடீரென இரத்த அழுத்தம் குறைவதால் உண்டாகும் நிலை இது. சிறிது உப்புக் கலந்த நீர் குடித்தால் எழுந்து கொள்வார்கள்.

மிகவும் பாரமானதை தூக்கும்போது, அல்லது கீழே உட்கார்ந்திருந்து மேலே எழும்போது தலை சுற்றல் உண்டாகும். இதற்கு இரத்த சோகையும் ஒரு காரணமாக இருக்கலாம். வைத்தியரின் பரிந்துரையின்றி உட்கொள்ளும் மாத்திரைகளால் பக்கவிளைவுகள் உண்டாகும். இதனால்




கூட தலை சுற்றல் உண்டாகும். உடலில் நீரிழப்பு ஏற்படும்போது தலை சுற்றல் ஏற்படும்.

உடலுக்கு தேவையான எலக்ட்ரோலைட் குறைவதால், மூளையில் சரியான தகவல் பரிமாற்றம் நடக்காமலிருக்கும்போது தலை சுற்றல் உண்டாகும். தேவையான அளவு நீர் குடிக்கிறீர்களா? என தெரிந்து கொள்ளுங்கள். சீரற்ற இதயத் துடிப்பு இருந்தால், இரத்தம் மூளைக்குச் செல்வதில் பாதிப்பு உண்டாகும். உடனே தலை சுற்றல் உண்டாகும். வாய்வினாலும் தலை சுற்றல் உண்டாகும், வாய்வினால் வயிற்றில் அழுத்தம் தரப்படும்போது, நரம்புகளை பாதித்து தலை சுற்றுவது போலிருக்கும்.

இப்படி தலை சுற்றலுக்கு பல காரணங்கள் உண்டு.

எப்போதாவது வந்தால் பயப்படத் தேவையில்லை. ஆனால் அடிக்கடி வந்தால் தவறாமல் வைத்தியரை நாடி பரிசோதித்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம்.

# செய்தித்துளிகள்

## மீன் ஏற்றுமதி மூலம் ரூ.240 கோடி வருமானம்

மீன்பிடி அமைச்சு அலங்கார மீன் ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு அமைய மீன்குஞ்சு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும்.

றுகுணு பல்கலைக் கழகத்தின் மீன் உயிரியல் பிரிவின் ஆதரவும் பெற்றுக்கொள்ளப்படும். மாத்தறை பொல்ஹேன, மடிக, ஹிக்கடுவ, உணவட்டுண ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இலட்சினைகள் நீக்க முடிபு

இலங்கை விமான சேவைக்கு சொந்தமான 4 விமானங்களை பாகிஸ்தானிற்கு குத்தகைக்கு விடுவதற்கு முன்னர் அதன் இலட்சினைகளை அகற்ற உள்ளதாக இரிதா லங்கா (Irida Lanka) தெரிவித்துள்ளது.

குறித்த விமான்ங்களுக்கு பாகிஸ்தானின் இலட்சினையுடன் வர்ணம் பூச உள்ளதாகவும் இந்த விமானங்கள் லண்டன் மற்றும் இஸ்லாமாபாத்திற்கு இடையில் சேவையாற்றும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் ஹ்பீர் காசிம் இலங்கையின் சில விமானங்களை பாகிஸ்தானுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கவுள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் நட்டத்தை ஈடு செய்யும் நோக்கில் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## அரசின் நிர்ணய விலையை மீறிய 12,000 வர்த்தகர்கள்!

அரசினால் விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலையை மீறி பொருட்களை விற்பனை செய்த 12,000 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மூலம் 12,000 வர்த்தகர்களிடம் அபராதப் பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் இதில் கொழும்பு நகரில் மாத்திரம் 50 மில்லியனுக்கு அதிகமான அபராதப்பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## எனக்கு அதிகாரம் இருந்தால் 6 அமைச்சர்களை நீக்குவேன்

எனக்கு அதிகாரம் கிடைத்தால் அமைச்சரவையில் உள்ள 6 அமைச்சர்களை பதவி நீக்கம் செய்வேன் என மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளரும் பேராசிரியருமான சரத் விஜயசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற கலாநிதி எம்.என்.பெரேராவின் 37ஆவது நினைவுவிழாவில் நேற்று முன்தினம் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## நல்லாட்சியை சீர்குலைக்கும் சாம்பல்தீவு புத்தர் சிலை

திருகோணமலையில் சமீபகாலமாக இடம் பெற்று வருகின்ற நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விடயங்கள் தொடர்பாகவும் அதில் மிக முக்கியமாக சாம்பல் தீவு சந்தியில் அண்மையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை விடயம் தொடர்பாகவும், திருகோணமலை மாவட்டம் உப்புவெளி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் க. காந்தரூபன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (இ-7-10)



# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் ''தெய்வீகச் சொற்பொழிவு'' இன்றும் இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சைவப்புலவர் கைலைநாதன் ''அழிந்த எழுத்து'' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7மணி முதல் 8 மணிவரை நடத்திவரும் தெய்வீக இசைச் சங்கமத்தில் இன்று செவ்வாய்க் கிழமை செல்வி. பூர்வஜா ஜனாத்தன சர்மா, செல்வி அமிர்தவர்சினி சண்முகநாதக் குருக்கள், ஸ்ரீமதி. கம்சல்வி சண்முகநாதக்குருக்கள் ஆகியோரின் இசை நிகழ்ச்சி இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை "கங்கை வேடனும் காளத்தி வேடனும்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (இ-7)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாட்டு- திருமதி. மி.ஹம்ஸத்வனி, வயலின் –அ.ஜெயராமன், மிருதங்கம்- க.கண்ணதாஸ், கெஞ்சிரா ஞா.வசந் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்றும் பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 6மேணிவரை நடைபெறும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் யு.சோதிநாதன் கலந்து கொள்வார். இதில் க.கைலைநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## 'வில்லிபாரதம்' நாளை

நல்லூர்க் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகாசபை முப்பது வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் "தெய்வீகத்தொடர் இசைப்பேருரை" (சங்கீத கதாப்பிரசங்கம்) நாளை புதன்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் "கானகதா வாரிதி" பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தா சர்மா "வில்லிபாரதம்" பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார். இதில் வயலின்- வித்துவான் கி. பத்மநாதன், ஆர்மோனியம்-வித்துவான், கண்ணன் , முரளி, மிருதங்கம் -வித்துவான் து.ராஜன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-7)

# நல்லூரானுக்கு இன்று 9ஆம் திருவிழா



## நடனமிடும் நல்லூரான்

எண்குணம் கொண்டவனிற்கு மாலை முல்லை
புண்பட்ட காயங்கள் ஆறிடும் எல்லை–அவன்
கண்பட்ட கணமே தொலைந்திடும் தொல்லை
சண்முகன் களி நடனம் புரியும் நல்லை

– க.பிரணவன்
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

சந்தமொழித் திருப்புகழ் சரமாரி பொழிவதன்
சங்கதியைக் காட்டவென்றோ
வந்தருண கிரிநாவில் வடிவேலா லோமென்று
வரைந்தது முண்மையன்றோ
அந்தநிலை யானபல வற்புதஞ் செய்தநீ
அடியாரைக் காத்தலென்றோ
நந்தமிழ்க் கவிஞர்களின் நாவுக்கு மேன்மைதரு
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

## அருள் தருவாய் குகனே



நல்லை நகர் வீதியிலே
நானிலம் போற்றுமளவிற்கு
நல்லையம் பதியிலே அமர்ந்து
நலங்கள் யாவும் தருவதற்காக
புள்ளி மயில் மீது அமர்ந்து
பக்த அடியார்களுக்கு
நல்லருள் புரிந்திடுவாய்
நல்லைக்குமரனே...

–கு.தனுஷன் (SSM), மாவிட்டபுரம்.

## நல்வரம் புரிவாயே நல்லூரானே

வள்ளி மணவாளவனே புள்ளி மயில் வாகனனே
நல்லூர் பதியினில் உறைபவனே நாராயணன் மருமகனே
தேவர்கள் சிறை மீட்ட தேவசேனாதிபதியே
வேதத்தின் பொருளுரைத்த வேலவனே
வேண்டுவார் வரமளிக்கும் சண்முகனே
இருப்பத்தைந்து தினங்களும் உன் அலங்காரம்
அடியவர்களை ஈர்ந்து இழுக்கும் உன் அருட்பார்வை
நம் வாழ்விலும் விடிவு கிடைக்க
நல்வரம் புரிவாயே நல்லூரானே

-தே.சுதன், கோண்டாவில்.

## "உன் ஆற்றலை விஞ்சுமோ"




பல்லவி
முருகா, முருகா முருகா (எமக்கு)
முக்தியைத் தருவாய் முருகா (முருகா)
அனுபல்லவி
ஆதியுமில்லா அந்தமும் இல்லா– (எம்)
சிவனுக்கு மகனாயப் பிறந்தவனே (முருகா)
சரணம்
ஆறு மலர்களில் தரித்தவனே–உமை
அள்ளி அணைத்த ஆறுமுகனே
கலியுகம் உந்தன் காலடியில் –உன்
தாய் தந்த வேலும் கையதனில் (முருகா)
வேண்டுதல் வேண்ட இசைபவனே –எம்
வினைகளை நீக்க உதித்தவனே
அறுவர் இணைந்த சக்தியடா–உன்
ஆற்றலை விஞ்சுமோ வினைகளைய்யா–(முருகா)

மலர் சின்னையா

## இளைஞர்கள் வன்முறையைக் கைவிட வேண்டும்

# பயங்கரவாதிகளிடம் இந்தியா அடி பணியாது

### பிரதமர் மோடி திட்டவட்டம்



**(டில்லி)**

**பயங்கரவாதிகளால் விடப்படும் அச்சுறுத்தல்களுக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது என்று சுதந்திரதின விழாவில் பிரதமர் நரேந்திரமோடி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.**

இந்தியாவின் 70 ஆவது ஆண்டு சுதந்திர தினவிழா நேற்று நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி, டில்லி செங்கோட்டை மைதானத்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்து, சுதந்திர தின உரையாற்றினார்.

முன்னதாக, டில்லி ராஜ்கட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்கு சென்ற பிரதமர் மோடி அங்குமலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர், டில்லி செங்கோட்டைக்கு கொடியேற்ற வந்த பிரதமர் மோடிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மூவர்ண கொடியை ஏற்றிய பிறகு முப்படையினரின் அணிவகுப்பை பார்வையிட்ட பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,

சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரம் பலப்படும். இந்த சட்ட மசோதா நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரசியல் கட்சிகளுக்கு நன்றி கூறியாக வேண்டும்.

சமூகநீதி அடிப்படையிலான பலமான சமூகம் உருவாகாமல் பலமான ஒரு நாட்டை கட்டமைக்க இயலாது.

நமக்குள் சமூக ஒருமைப்பாடு மிகவும் முக்கியம். மதம் மற்றும் இனத்தின் பெயரால் பிரிவினைப்படுத்துவது நாட்டை காயப்படுத்தும். இவற்றை எல்லாம் கடந்து நாம் எழுச்சி பெற வேண்டும்.

மதவாதம் மற்றும் தீண்டாமை போன்ற பல்லாண்டுகால பழைமையான சமூக தீமைகளை எதிர்கொள்ள மென்மையும், உறுதியும் கலந்த அணுகுமுறை தேவைப்படுகிறது.

தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்துக்கு இந்த நாடு அடிபணியாது. இளைஞர்கள் அனைவரும் வன்முறையை கைவிட்டு நன்முறை என்ற மூல நீரோட்டத்தில் தங்களை இணைத்து கொள்ள முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## காஷ்மீர் விடுதலைக்கு பாகிஸ்தான் தொடர்ந்தும் ஆதரவு அளிக்கும்

### பாகிஸ்தான் தூதுவர் பேச்சால் சர்ச்சை

(டில்லி)

காஷ்மீர் விடுதலைக்கு பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித் கூறியிருப்பது புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாத தளபதி பர்கான் வானி கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து அங்கு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன. இந்த சம்பவங்களால் 60 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ள நிலையில், அங்கு தொடர்ந்து பதற்றமான சூழல் நீடிக்கிறது.

இந்தப் பிரச்சினையில் பாகிஸ்தான் அரசு மூக்கை நுழைத்து பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துகளை கூறி வருகிறது. மேலும் அங்கு இந்திய படைகளுக்கு எதிராகப் போராட்டங்களை தூண்டி விடுவதற்காக பயங்கரவாதிகளையும் அனுப்பி வைத்து வருகிறது. அண்மையில் இந்தியப் படைகளிடம் பிடிபட்ட பகதூர் அலி என்ற பாகிஸ்தான் பயங்கரவாதி இந்த தகவலை கூறியிருந்தார்.

**விடுதலைக்காக அர்ப்பணிப்பு**

பாகிஸ்தானின் இத்தகைய நடவடிக்கைகள் இந்தியாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில், காஷ்மீர் விவகாரத்தில் மேலும் ஆத்திரமூட்டும் வகையில் பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித் நேற்று முன்தினம் சில கருத்துகளை வெளியிட்டார். பாகிஸ்தான் சுதந்திர



தினத்தையொட்டி டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் அவர் உரையாற்றும் போது,

காஷ்மீர் பிரச்சினையை பொறுத்தவரை இந்த ஆண்டின் சுதந்திர தினத்தை காஷ்மீர் விடுதலைக்காக நாங்கள் அர்ப்பணிக்கிறோம. அங்குள்ள மக்களின் தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அங்கு நிலவி வரும பதற்றமான சூழலை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்றார். (இ-5)

## பாகிஸ்தானின் சுதந்திர தின விழா



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சுதந்திர தின கொண்டாட்டத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப் இஸ்லாமாபாத் நகரில் தேசிய கொடியேற்றினார்.

ஒருங்கிணைந்த இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் பாகிஸ்தான், இந்தியா என இரண்டு நாடுகளாகப் பிரித்தனர். இந்தியாவிற்கு ஓகஸ்ட் 15 ஆம் திகதியும், பாகிஸ்தான் நாட்டிற்கு ஒரு நாள் முன்பாக ஓகஸ்ட் 14 ஆம் திகதியும் சுதந்திரம் வழங்கப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் பாகிஸ்தானில் 70 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நாடு முழுவதும்






நடைபெற்றது.

நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் 31 குண்டுகளும், மாகாணங்களின் தலைநகரங்களில் 21 குண்டுகளும் முழங்கப்பட்டதாக பாகிஸ்தான் வானொலி நிலையம் தெரிவித்தது.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள கன்வென்ஷன் மையத்தில் ஜனாதிபதி மம்நூன் ஹுசைன் மற்றும் பிரதமர் நவாஸ் ஷெரீப் இருவரும் தேசிய கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினர். (இ-5)

# இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தினம் நேற்று



இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தினம் நேற்று தலைநகர் டில்லியின் செங்கோட்டையில் கொண்டாடப்பட்டது. 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து இந்தியா தனி சுதந்திர நாடாகியது. 70 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## நம்மை தாக்கும் பயங்கரவாதிகளை பாகிஸ்தான் புகழ்பாடுகிறது' -மோடி

'நம்மை தாக்கும் பயங்கரவாதிகளை' புகழ்பாடுகிறார்கள்' என்று பாகிஸ்தான் மீது பிரதமர் நரேந்திர மோடி கடும் விமர்சனத்தை முன் வைத்தார்.

இந்திய சுதந்திர தின விழா நேற்று (திங்கட்கிழமை) நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட் டது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி, டில்லி செங்கோட்டை மைதானத்தில் தேசிய கொடியை ஏற்றி வைதது, நாட்டு மக்களுக்கு சுதந்திர தின உரையாற்றினார்.

பிரதமர் மோடியின் உரையின் போது பயங்கரவாதிகள் புகழ்பாடும் பாகிஸ்தானுக்கு கடும் பதிலடியை கொடுத்தார். இந்தியா அகிம்சை நாடாக இருந்தாலும், பயங்கரவாதத்தை எந்த வடிவிலும் பொறுத்துக் கொள்ளாது, ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையால் கொல்லப்பட்ட பயங்கரவாதி பர்கான் வானி யின் புகழை பாடிய பாகிஸ்தானுக்கு கடுமையான வார்த்தையால் பதிலடி கொடுத்த பிரதமர் மோடி, "நம்மை தாக்கும் பயங்கரவாதிகளை அவர்கள புகழ்பாடுகிறார்கள், ஆனால் பெஷாவர் பயங்கரவாத தாக்குதலில் மாணவர்கள் உயிரிழந்த போது நாம் கண்ணீர் சிந்தி னோம்,"என்றார். (இ-5)

## விஞ்ஞானி சண்முகத்துக்கு அப்துல்கலாம் விருது

### ஜெயலலிதா வழங்கினார்



(சென்னை) சுதந்திர தின விழாவில் அப்துல்கலாம் விருதையும், கல்பனா சாவ்லா விருதையும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வழங்கினார்.

டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் விருது - சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ் ஞானி டாக்டர் சண்முகம். இவருக்கு ரூ.5 இலட்சத் துக்கான காசோலை, 8 கிராம் தங்கப்பதக்கம், சான் றிதழ் வழங்கப்பட்டன.

துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது - நாமக்கல் மாவட்டம் ஜெயந்தி. இவருக்கு ரூ.5 இலட்சத்துக்கான காசோலை, ரூ.5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் வழங் கப்பட்டது. (இ-5)

## காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மீது தீவிரவாதிகள் கடும் துப்பாக்கிச்சூடு




ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நேற்று காவல் பணியில் ஈடுபட்டிருந்த ரோந்துப் படையினர் மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்பு படையை சேர்ந்த 7 வீரர்கள் காயமடைந்தனர்.

இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தினவிழாவையொட்டி நேற் றுக்காலை ஜம்மு-காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகர் மாவட்டத்தில் உள்ள ஷேக்-ரி-காஸ் பகுதியில் பாதுகாப்பு படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். நவ்ஹாட்டா என்ற இடத்தில் மறைந்திருந்த சில தீவிரவாதிகள் ரோந்துப்படை வாகனத்தின் மீது சரமாரியாக துப்பாக்கிகளால் சுட்டனர்.

இந்த தாக்குதலில் மத்திய பாதுகாப்பு படையை சேர்ந்த 7 வீரர்கள் காயமடைந்ததாகவும், பாதுகாப்பு படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் அங்கு தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது. (இ-5)

## காஷ்மீரில் முதலமைச்சர் ஏற்றியபோது தேசியக்கொடி கீழே விழுந்தது

### விசாரணைக்கு உத்தரவு

ஜம்மு- காஷ்மீரில் முதலமைச்சர் மெகபூபா முப்தி தேசியக் கொடியை ஏற்றிய போது கீழே விழுந்த விவகாரம் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு உள் ளது.இந்திய சுதந்திர தின விழா நேற்று நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. டில்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரை யாற்றினார். இதேபோல் மாநில தலைநகரங்களில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி உரையாற் றினர். ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் அம்மாநில முதலமைச்சர் மெகபூபா முப்தி தேசியக் கொடியை ஏற்றினார்.

ஸ்ரீநகரின் பாக்ஷி மைதானத்தில் முதலமைச்சர் மெகபூபா முப்தி கொடி யேற்றுவதற்காக கயி றறை இழுத்தபோது கொடிக் கம்பத்திலிருந்து மூவர்ண கொடி தரையில் விழுந் தது. அப்போது அங் கிருந்த பாதுகாப்புப் படை யைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் கீழே விழுந்த மூவர்ண கொடியை மெகபூபா முப்தி மரியாதை செலுத்தி முடிக் கும் வரை கையில் ஏந்திய படி நின்றனர். பின்னர் பாது காப்பு அதிகாரிகள் உடனடியாக தேசிய கொடியை கம்பத்தில் ஏற்றினர். முதல் முறையாக இச்சம்பவம் நடை பெற்றது அவருக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது.



பொலிஸ் ஜெனரல் ராஜேந்திரகுமார் பேசுகையில், இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைக்கு உத்தர விடப்பட்டது. தவறு செய்தவர் பதிலளிக்க வேண்டும். எப்படி கொடி இது போன்று கீழே வர முடியும்! என்று கேள்வி எழுப் பினார். (இ-5)

# யுத்தத்தில் நான்கில் 3 பங்கை நான்தான் நிறைவு செய்தேன்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உரிமை கோரல்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் நான்கில் மூன்று பங்கை தானே நிறைவு செய்துள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எஞ்சியிருந்த இறுதி ஒரு பங்கை மட்டுமே நிறைவு செய்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.**



மேலும் கடந்த அரசாங்கத்தினால் சிதைந்த இலங்கையை கட்டியெழுப்பவும் புத்தெழுச்சி பெறச் செய்வதற்கும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் எவ்விதமான தவறும் இல்லை எனவும் தெரிவித்தார்.

மீரிகம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியிலேயே யுத்தத்தின் மூன்று பங்கு நிறைவடைந்து விட்டது. மிகுதியிருந்த சொற்ப பகுதியினையே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவு செய்திருந்தார். அவ்வாறிருக்கையில் சிலர் யுத்தத்தை கடந்த அரசாங்கம் நிறைவு செய்தமையினாலேயே மீண்டும் ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தை மக்கள் வழங்கினர் என்றும் யுத்தத்தின் நாயகனாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சித்திரிக்கவும் முனைந்தனர்.

உண்மையாக விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் வெற்றிக்கு ஐக்கிய தேசிய கட்சியும் ஒரு பங்கு வழங்கியிருந்தது. நான் ஆட்சிக்கு வரும் முன்னரும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் நான்கில் மூன்று பங்கு யுத்தம் நிறைவுபெற்று விட்டது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் மேற்கொண்ட முயற்சிகளின் பின்னரே யுத்தத்தை நிறைவு செய்ய அவரால் முடிந்ததே தவிர தனித்து அவரால் யுத்தத்தை ஒருபோதும் வெற்றி கொண்டிருக்க முடியாது. அத்தோடு யுத்தத்திற்கான ஆயுதங்களை எமது அரசாங்கமே கொள்வனவு செய்திருந்தது.

எனவே நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் யாரோடு வேண்டுமானாலும் இணைந்து செயற்பட தயாராக உள்ளேன். நாட்டின் நன்மைக்காக என்னை அர்ப்பணித்து செயற்பட தயாராகவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ஐ.எஸ்.ஊடுருவல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு அவதானம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும் ஆசிய நாடுகளில் இருந்தும் பயங்கரவாத இயக்கமான ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்து கொள்ளும் நபர்கள் இலங்கையை அடித்தளமாக பயன்படுத்துவது குறித்து வெளிவரும் செய்திகளை சாதாரணமாக கருத முடியாது எனவும் இது தொடர்பில் உள்நாட்டிலும் அதிக கவனம் செலுத்தப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவை மேலும் பலப்படுத்தும் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது.

மத்திய கிழக்கு நாடுகளில் பரவிவரும் பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். அமைப்பில் இணைய முயற்சிக்கும் தெற்காசியர்கள் தமது பயணப்பாதையாக இலங்கையில் யாழ்ப்பாணத்தை பயன்படுத்தி வருவதாக இந்திய புலனாய்வுப்பிரிவு மற்றும் இந்தியாவில் இயங்கிவரும் முக்கிய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ள நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன மேலும் தெரிவிக்கையில்,

மத்திய கிழக்கு நாடுகளில் இயங்கிவரும் பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ் அமைப்பில் இணைந்து கொள்ளும் வகையில் ஆசிய நாடுகளில் இருந்து இஸ்லாமியர்கள் பயணிக்கின்றமை தொடர்ச்சியாக ஆசிய நாடுகளுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் இந்தியாவில் இருந்து வெளிவரும் செய்திகள் தொடர்ச்சியாக இந்த விவகாரம் தொடர்பில் கருத்து தகவல்களை தந்த வண்ணமே உள்ளன. இப்போதும் யாழ்ப்பாணப் பாதையை பயன்படுத்தி ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு பயணிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையைப் பொறுத்தவரையில் அச்சுறுத்தலான வகையில் அல்லது இவ்வாறான பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக இலங்கை மக்கள் செயற்படவில்லை என்பது உறுதியாக தெரிவிக்க முடியும்.

எமது புலனாய்வுப் பிரிவினர் இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடனும் அவதானத்துடனும் செயற்பட்டு வருகின்றனர். எவ்வாறு இருப்பினும் தேசிய பாதுகாப்பை சீரழிக்கும் செயற்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான வகையில் இவ்வாறான செயற்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் அலட்சியமாக செயற்பட முடியாது. மேலும் கடந்த காலத்திலும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் கூட்டணியில் இலங்கையை சேர்ந்த நபர்கள் உள்ளதாக தகவல்கள் வெளிவந்தன.

இப்போதும் புலனாய்வு பிரிவின் தகவல்கள் அவ்வாறு வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்த சகல அதிகாரங்களையும் ஜனாதிபதி எமக்கு கொடுத்துள்ளார். தேவையான சந்தர்ப்பத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தி நாட்டைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## காரியம் ஆகும்படி பேசுவது எப்படி?

வார்த்தை விற்பன்னர்கள் வாழ்க்கையில் சாதிக்கிறார்கள். பேசத் தெரியாதவர்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். நன்கு பேசத் தெரிந்த விற்பனையாளர்கள் எப்படிப்பட்ட சாதாரண சரக்கையும் விற்றுக் காசாக்கிவிடுகிறார்கள். தலை சிறந்த நிர்வாகிகள் பலரும் திறமையாகப் பேசுபவர்களாகவே இருக்கிறார்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஒட்டி, உரிய வார்த்தைகளை உரிய விதத்தில் பேசி எதையும் நம்மால் சாதித்துக் கொள்ள முடியும்.

ரயிலில் சக பயணி தம் உடைமைகளையெல்லாம் இடச் சிக்கனமின்றிப் போட்டு வைத்திருக்கிறார். நமக்கோ நம் பெட்டியை வைக்க இடமில்லை. இத்தகைய சூழ்நிலையில் இப்படிக் கண்டபடி போட்டு வைத்தால் நான் எப்படிப் பெட்டியை வைப்பதாம்? என்பது தான் பெரும்பாலானவர்களின் பேச்சாக இருக்கும். இது தவறு. ஒரு புன்சிரிப்புடன் உங்கள் பையைக் கொஞ்சம் நகர்த்திக் கொள்ளட்டுமா? என்று கேட்டால் ''ஓ தாரளமாக!'' என்பார். இதை விட்டு விட்டு , "நீ மட்டும் தான் டிக்கெட் வாங்கியிருக்கிறாயா? நான் என்ன வித்தவுட்டா?'' என்று வார்த்தைகளை வளர்த்துக் கொண்டு போவது நல்லவர்கள் செய்கிற காரியமில்லை.

சங்கத்தில் இருப்பவர்களிடம் நமக்குக் காரியம் ஆக வேண்டும் என்றால் உங்கள் சங்கடம் எனக்குப் புரியாமலில்லை. ஆனாலும் என்று ஆரம்பித்துப் பிறகே நம் விடயத்தைச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் காரியம் ஆகாததோடு கெட்ட பெயரே மிஞ்சும். நம் நிலைமை தெரிந்தும் வேறு வழியில்லாமல் கேட்கிறார். அவ்வளவு அத்தியாவசியம் அவருக்கு என்பதை அவர்கள் உணரும் வகையில் பேசினால் சரி.

கடன் கேட்கும் போது, 900 ரூபாய் இருக்கிறது. போதாக்குறைக்குத் தான் நூறு கேட்கிறேன் என்கிற பாணியில் வார்த்தைகளைப் போட்டுக் கேட்க வேண்டுமே தவிர, கஷ்டமோ கஷ்டம் என்று புலம்பினால் காசு கிடைக்காது. முறைப்பும் விறைப்பும் வேண்டாம்.

அதிகாரத்தில் இருப்பவர்களும், தகுதி உள்ளவர்களும் மிரட்டி உருட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். ஆனால், பொது வழி அதுவன்று.

காரியத்திற்காக அணுகுமுன், கேட்டால் மறுக்க முடியாதபடி பேசுவது எப்படி என்று சிந்தித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சொன்னால் நன்றாக இருக்குமா? அப்படிச் சொன்னால் ஏற்படுமா? எது தேவையில்லை என்கிற வழியில் சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் தயார் செய்யாமல் தேர்வு எழுதுகிற பிள்ளைகளின் கதியே நமக்கு ஏற்படும்.

தெரிந்தவர்கள் என்றால் உதவி கேட்கும் போது குத்திக்காட்டிப் பேசக் கூடாது. காரியம் கெட்டுவிடும்.

உடனே உங்க ஞாபகம் தான் வந்தது. உங்களிடம் கேட்காம வேறு யார்கிட்டே நான் கேட்க முடியும்? என்கிற அணுகு முறையும் பயன் தரும்.

தங்கள் உதவி முதல் கட்டத்தில் மறுக்கப்பட்டதும் உடனே சலிப்படைந்து மற்றவர்களைத் திட்டத் தொடங்கி விடுவார்கள் சிலர். இது, செய்வோமா வேண்டாம் என்கிற கொஞ்சநஞ்சக் குழப்பத்தில் இருப்பவர்களை ஒரேயடியாக செய்ய வேண்டாம் என்கிற முடிவுக்கு நாமே கொண்டு வந்து நிறுத்திவிடுவோம்.

அண்டாகாகசம் !அபூகாகசம்! திறந்திடு சீசே! என்று சொல்லி மலைக்குகையைத் திறக்க வைத்த வார்த்தை சாகசம் அலிபாபாவுக்கு மட்டும் கைவந்த கலையல்ல! நமக்கும் கைவரக்கூடிய கலைதான். மந்திரம் அடங்கிய , பொருள் பொதிந்த , தேனொழுகும் வார்த்தைகளைப் பயன்படுத்தினால் இரும்பு இதயங்களையும் நம்மால் திறக்க முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## வரலாறு பகுதி-I விடைகள்


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 1 | 21. | 2 | 31. | 1 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 3 | 32. | 1 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 1 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 3 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 2 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 1 | 38. | 4 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 2 | 40. | 2 |

01) அ.
(i)




01.ஊராதோட்டை
02.மகாதித்த
03.தம்போவா வாவி
04.சிகிரியா
05.புலஸ்தி நகர்
06.அம்பதித்த
07.கம்பளை
08.மினிப்பே அணை
09.கிரிந்தி ஓயா
10மகாநாகஹு'ல

(ii)



01.இத்தாலி
02.லண்டன்
03.சுயெஸ் கால்வாய்
04.பீஜிங்
05.பர்மா
06.பாருகச்ச
07.மகாநதி
08.பாரசீக வளைகுடா

(ஆ)
(i) A - அசேல மன்னன்
B - வலகம்பா மன்னன்
C - ஹிரோஹித்தோ பேரரசன்
D - வீ. ஐ. லெனின்
(ii) 1. புனித பீட்டர் தேவாலயம்
2. இத்தாலி
3. சமய வழிபாடுகள் தொடர்பாக
4. மைக்கல் ஆஞ்சலோ / ரபாயல்
(iii) 1. டயட் சபை
2. ஜப்பான்
3. சட்டம் இயற்றும் பொருட்டு
4. மெக் ஆத்தர்

### பகுதி II விடைகள்

02) (i) A - அரிஸ்டோட்டல்
B - தொலமி
C - பிரகோபியஸ்
(ii) A - பெரிமியன் குளம்
B - பதுளைத் தூண் கல்வெட்டு
C - சிதுல்பவ்வ
D - களுதிய பொக்குண
(iii) பொருளாதாரம்
1. மின்னேரியா, ஹு'ருளு, கவுடுலு போன்ற குளங்களையும், பப்பரகந்த கால்வாயையும் அமைத்து நீர்ப்பாசனத்திற்கு உதவியமை.
2. விவசாய முன்னேற்றத்திற்கான நடவடிக்கையை மேற்கொண்டமை. (நெற்பயிர்ச்செய்கை) சமயம்
3. மகாசேன மன்னன் இலங்கையில் மகாயான பௌத்த வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியமை.
4. மகா விகாரை எல்லையினுள் ஜேத்தவன விகாரையையும் தூபியையும் நிறுவியமை.
5. மின்னேரிய விகாரை, கோகண்ண விகாரை, கலந்தக்க விகாரை என்பவற்றை நிறுவியமை
(iv) 1. அநுராதபுர இராசதானியின் இறுதிக் காலத்தில் கடுமையான ஆக்கிரமிப்பு நிகழ்ந்தமை.
உ-ம் : மூன்றாம் கிருஷ்ணன், இரண்டாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன்
2. நீர்ப்பாசனத்துறை ஒழுங்கான முறையில் நிர்வகிக்கப்படாமையால் விவசாயம் வீழ்ச்சியுற்றுப் பொருளாதாரம் மந்த நிலையடைந்தமை.
3. திறமையற்ற ஆட்சியாளர்கள் ஆட்சிபீடமேறியமை.

4. ஐந்தாம் மகிந்த மன்னனின் பலவீனமான ஆட்சியின் காரணமாகப் படைவீரர்களுக்கு சம்பளம் கொடாமை.
5. இதனால் படைவீரர் மாளிகையைச் சுற்றிவளைத்து சம்பளம் கோரி மன்னனை வற்புறுத்தியமை, மன்னன் மாளிகையை விட்டுச் சென்றமை.
6. முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகிய சோழ அரசர்களின் ஆக்கிரமிப்பு

03) (i) A - மகாசேனன் B - இரண்டாம் முகலன் C - இரண்டாம் அக்போ
(ii) A - கலிங்கல் (மடைக் கதவு)
B - கலிங்கல் தொட்டி
C - கலிங்கற் கட்டு
D - சிறு குளங்கள்
(iii) A - அரசியல்
1. மாகனுடன் நடைபெற்ற யுத்தம்
2. சந்திரபானுவின் முதலாவது ஆக்கிரமிப்பு
3. சந்திரபானுவின் இரண்டாம் ஆக்கிரமிப்பு... என்பன
B - சமயம்
1. பிக்குமாரின் ஒழுக்கம் தொடர்பாகத் தம்பதெனிய கத்திகாவத்தயை எழுதுவித்தமை
2. உபசம்பதா சடங்கினை நடத்தியமை
3. வெளிநாடுகளிலிருந்து ஒழுக்க தர்மமுடைய பிக்குகளை வரவழைத்தமை... போன்றன
(iv) A - பண்பாடு
1. தொழில் அடிப்படையிலான சாதி முறைகள் காணப்பட்டமை.
2. திருமணச் சடங்குகள் சாதி முறையின் அடிப்படையில் இடம் பெற்றமை.
3. சமூகத்தில் தந்தை பிரதான இடத்தைப் பெற்றமை.
4. மக்கள் பல்வேறு கிராமிய விளையாட்டுக்களிலும், விநோத விளையாட்டுக்களிலும் ஈடுபட்டமை (பந்தாட்டம், ஊஞ்சல் போன்றன)
5. பல்வேறு சமய விழாக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை (வெசாக், பொசன், எசல)
6. பாரம்பரிய பழக்க வழக்கங்கள் கடைப்பிடிக்கப்பட்டமை (பெயர் வைத்தல், சோறு ஊட்டுதல், திருமணம், மரணம்)
7. சமயம், கல்வி ஆகிய நடவடிக்கைகளில் பெண்களும் ஈடுபட்டமை (உலகுடைய தேவி, பத்மாவதி)
B - பொருளாதாரம்
1. விவசாயம்
2. மழை நீரைப் பயன்படுத்தி நெற்பயிர்ச் செய்கை நடைபெற்றமை
3. தென்னைப் பயிர்ச்செய்கை பரவலடைந்தமை (களுத்துறை, பெந்தோட்டை)
4. கறுவா வர்த்தகப் பயிர்ச்செய்கையாகப் பரவலடைதல்
5. பாக்கு, மிளகு போன்றவை ஏற்றுமதிப் பொருளாகுதல்.
◆ வர்த்தகம்
1. முத்து, இரத்தினக் கற்கள், யானைத் தந்தம் என்பன ஏற்றுமதி செய்யப்பட்டமை
2. வெளிநாட்டு வர்த்தகம் (இந்தியா, சீனா)
3. வெளிநாட்டு வர்த்தகம் மன்னனின் ஏகபோக உரிமையாக இருந்தமை
4. பணப் புழக்கம் இருந்தமை (தம்பதெனிய நாணயம்)
5. உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய கடைவீதிகள் இருந்தமை
6. கைத்தொழில்
7. தேவைக்கு ஏற்ப புடைவைகள் நெய்தமை (உற்பத்தி செய்யப்பட்டமை)
8. விவசாய உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டமை
9. ஆபரணம், மட்பாண்டங்கள், இரத்தினக் கற்கள் போன்ற கைத்தொழில்கள்

04) (i) A - கி.பி 1505 B - கி.பி 1638 C - கி.பி 1815
(ii) A - அநாகரிக தர்மபால B - ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
C - ஆறுமுக நாவலர் D - எம்.சீ.சித்திலெப்பை
(iii) 1. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை
2. நிர்வாகக் குழு முறை ஆரம்பிக்கப்பட்டமை
3. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை பரவலாக்கப்பட்டமை
4. ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை
5. அரச கழகம் அமைக்கப்பட்டமை
(iv) 1. விவசாய, நடவடிக்கைகளுக்கு அரச ஆதரவு கிடைக்காமை
2. கி.பி. 1840, 12 ஆம் இலக்க தரிசு நிலச் சட்டம் செயற்படுத்தப்பட்டமை
3. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் பொருட்டு மலைநாட்டில் நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டமை
4. 1833 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் விளைவாகக் கட்டாய இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை

05) (i) A - அபோன்சு பெரெய்ரா த லசர்தா B - பரராஜசேகரம்
C - முதலாம் இராஜசிங்கன்
(ii) A - லோரன்ஸ் பீல் B - வில்லியம் பல்க்
C - தோமஸ் மெயிற்லண்ட் D - வெஸ்ட் ரிஜ்வே
(iii) 1. தொன் ஜுவான் தர்மபாலன் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக விளங்கியமை.
2. தர்மபாலன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியமை. (இதனால் இலங்கையில் நிலவிய அரச உரிமை, சம்பிரதாயங்கள் இல்லாதொழிதல். எனவே பௌத்த பிக்குமாரும், மக்களும் கண்டி இராச்சியத்திற்கும் சீதாவாக்கைக்கும் இடம் பெயர்ந்தமை. இதனால் பிக்குமாரின் ஆதரவு மன்னனுக்குக் கிடைக்காமை)
3. தர்மபாலன் நிர்வாகத்தில், போர்த்துக்கேயரின் பாதுகாப்பையும் ஆலோசனையையும் பெற்றமை
4. மன்னன் நன்கொடையாகக் கோட்டை அரசை போர்த்துக்கேயருக்கு வழங்கியமை.
(iv) 1. கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களும் மன்னார், கற்பிட்டி ஆகிய துறைமுகங்களும் ஒல்லாந்தருக்கு வழங்கப்பட வேண்டும்.
2. கடற்கரையில் 4 மைல் (ஒரு கவ்வ) அகலப் பிரதேசம் ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்.
3. மலைநாட்டு வர்த்தகத்திற்கும், கறுவா புடைத்தலுக்கும் மரங்களை வெட்டிக் கொள்வதற்கு மன்னன் அனுமதியளிக்க வேண்டும். இவ்வாறான நிபந்தனைகளினால் ஒல்லாந்தர் இலங்கையில் வர்த்தக ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தமையை விளக்குதல் வேண்டும்.

06) (i) A - டி.எஸ். சேனாநாயக்க
B - எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க
C - டட்லி சேனாநாயக்க
(ii) 1. பேசுவதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்குமான உரிமை
2. சட்டத்தின் முன்னிலையில் நீதியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை
3. விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை
4. தாம் விரும்பிய சமயம் ஒன்றைப் பின்பற்றும் உரிமை
5. இம்சைப்படுத்துதலிலிருந்து விடுபடும் உரிமை

16 ஆம் பக்கம் பார்க்க ...

## வரலாறு வினா தொடர்ச்சி...

8. (i) மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டு பிடித்தவர்களின் பெயர்களை அடைப்புக்குறிக் குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.
A - கோள்கள் சூரியனை மையமாகக் கொண்டு விளங்கும் கொள்கை
B - கோள்கள் சூரியனைச் சுற்றி நீள்வட்டப் பாதையில் வருதல்
C - தொலை நோக்கி
(கலிலியோ கலிலி, மைக்கல் சர்டெஸ், ஜொஹன்ஸ் கெப்லர், நிக்கலஸ் கொப்பர்னிகஸ், தோமஸ் மூர்)
(ii) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
(iii) நாடுகாண் பயணங்களின் விளைவாக உலகில் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒவ்வொன்றினை எழுதுக.
(iv)
(அ) ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயச் சீர்திருத்தத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்த இருவரின் பெயர்களை எழுதுக.
(ஆ) சமயச் சீர்திருத்தத்தின் விளைவாக ஐரோப்பிய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.

9. (i) இந்தியத் தேசிய காங்கிரசின் புரட்சிகரத் தலைவர்கள் மூவரின் பெயர்களை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.
(பால கங்காதர திலகர், சுரேந்திரநாத் பானர்ஜி, பிபின் சந்திரபோல், தடாபாய் நபரோஜி, லாலா லஜ்பதி ராய், கோபால கிருஷ்ண கோகலே)
(ii) 1857 ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கான காரணங்கள் இரண்டினைத் தருக.
(iii) இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு மகாத்மா காந்தி பின்பற்றிய அகிம்சை வழிகள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.
(iv) மெய்ஜி சீர்திருத்தத்தின்போது யப்பானின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை விபரிக்குக.

10. (i) முதலாம் உலக யுத்தத்தின்போது நட்பு அணியில் உள்ளடங்கிய மூன்று நாடுகளின் பெயர்களை எழுதுக.
(ii) முதலாம் உலக மகா யுத்தத்திற்கான இரண்டு காரணங்களைத் தருக.
(iii) உலக சமாதானத்தின் பொருட்டு நிறுவப்பட்ட சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.
(iv) "பனிப்போர் காலத்தில் இரு அணிகளுக்கிடையில் நடைபெற இருந்த மோதல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டுள்ளன" இவ்வாறான மூன்று சந்தர்ப்பங்களைத் தெளிவுபடுத்துக.

◆ ◆ ◆

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## கணிதம்-I NEW

ஆசிரியர் எஸ்.கே.சுந்தரச்செல்வன்
யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி

### பகுதி I, பகுதி-A

எல்லாவினாக்களிற்கும் விடை தருக.

1) நான்கு பொருளின் விலை ரூபா 28 எனின் 5 பொருட்களின் விலையைக் காண்க.


2) சுருக்குக. $x/(x-1)+1/(1-x)$

3) 8cm நீளமான செவ்வகம் ஒன்றின் சுற்றளவு 24 cm எனின் அச் செவ்வகத்தின் அகலத்தைக் காண்க.

4) ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக் காணம் $150^\circ$ எனின்

I) புறக் கோணம் ஒன்றின் பெறுமதி யாது?

II) பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க.

5) 

x இன் பெறுமானத்தைக் காண்க.

6) 16cm, 9cm மூலை விட்டங்களை உடைய சாய்சதுரம் ஒன்றின் சுற்றளவைக் காண்க.

7) $1/\sqrt{3}\cos 30 \sin 30$ இன் பெறுமானத்தைக் காண்க.


8) $m/n= 2/3$ எனின் $(m+n)/(n-m)$ இன் பெறுமானத்தைக் காண்க.

9) $2x / 3-1= 3$ இனைத் தீர்க்க


10) $P= \{2, 3, 5, 7\}$ என்ற தொடையை, தொடைப்பிறப்பாக்கி முறையில் தருக.

11) I) $1/8=2^{\square}$ பெட்டியினுள் வர வேண்டிய இலக்கத்தை எழுதுக.

II) இதனை மடக்கை வடிவில் தருக.

12) 

தரப்பட்ட செங்கோணவடிவ முக்கோணிABC யில் $AB= \sqrt{5}$ அலகும் $AC= 3$ அலகுமாக இருப்பின் ABC யின் பரப்பளவைக் காண்க.($\sqrt{5}$ = 2.2 எனக் கொள்க)


13) 

தரப்பட்ட உருவானது உருளை ஒன்றின் குறித்த பகுதியைக் குறிக்கின்றது. உருளையின் நீளம் 35cm ஆரை 7cm எனின் இத் திண்மத்தின் வளை மேற்பரப்பளவைக்காண்க.

14) $2+4\sqrt{2}$ என்பதன் பெறுமானம் பின்வருவனவற்றுள் எதற்குச் சமனானது.

i) $6\sqrt{2}$ ii) $6+\sqrt{2}$ iii) $(2\sqrt{2}+1)2$ iv) $2+\sqrt{16}$

15) தரப்பட்ட உருவில் O வட்ட மையம் A,B,C என்பன வட்டத்தின் மீதுள்ள புள்ளிகளாகும். கோண $\hat{DBC}=32^\circ$ எனின் x எனின் பெறுமானத்தைக் காண்க.





16) குறித்த குவளை ஒன்றின் 1/2 பங்கை செய்து முடிக்க 6 மனிதர்களுக்கு 4 நாட்கள் எடுத்தது எனின் அவ் வேலையின் முழுமையையும் முடிப்பதற்கு 8 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?


17) $\log_a 3 =x$, $\log_a 2=y$ எனின் $\log_a 27/4$ ஐ x,y சார்பில் தருக.

18) $T=2\pi\sqrt{l/g}$ என்பதால் காட்டப்படும் ஊசல் குண்டு ஒன்றின் அலைவுகாலம் (T) இன் சமன்பாடு தரப்படுகிறது $l$ ஐ எழுவாயாக மாற்றுக.


19) $y<x$ என்ற பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.




20) தரப்பட்ட உருவில் O வட்ட மையம், AB=BO, DE விட்டம் எனின் $\hat{BOC}$ இன் பெறுமானத்தைக் காண்க.




21) A,B என்பன இரு இடை வெட்டும் தொடைகள் ஆகும். $A\cap B=\{2,3,5\}$, $\cap(A)=7$, $\cap(B)=6$ எனின் $A\cup B$ இல் அமையத்தக்க மூலகங்களின் எண்ணிக்கையைக் காண்க.




22) 5 மாணவர்களின் இடை நிறை 43kg ஆகும். இவர்களுடன் மேலும் 3 மாணவர்கள் (சம நிறையுடையவர்கள்) சேர்க்கப்பட்ட போது 8 மாணவர்களினுள் இடை நிறை 42 1/2 kg ஆகக் காணப்பட்டது எனின் மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட மாணவன் ஒருவனின் நிறையைக் காண்க.

மிகுதி நாளை வெளிவரும்...

### வரலாறு பகுதி II விடை தொடர்ச்சி

(iii)

(அ) 1. ஜனாதிபதித் தேர்தல்
2. விகிதாசார பிரதிநிதித்துவ முறை
3. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு

(ஆ) 1. ஜனாதிபதித் தேர்தல்
- முழு நாடும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படல்
- தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 50வீதத்திற்கு அதிகமான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வேட்பாளர் வெற்றியடைவார்

2. விகிதாசார பிரதிநிதித்துவ முறை
- பாரிய தேர்தல் தொகுதிகள் உள்ளமை
உ-ம்: பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மாவட்டம் ஒரு தேர்தல் தொகுதியாக விளங்குகின்றமை
- வேட்பாளர்கள் குழுவாகப் போட்டியிடல்
- தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை முன் கூட்டியே தீர்மானிக்கப்படும்.
- வாக்குகளை அளிக்கும்போது தாம் விரும்பிய கட்சிக்கும் அதன் பட்டியலில் உள்ள மூவருக்கும் விருப்பு வாக்குகளை அளித்தல்.
- கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின்படி விகிதாசார முறைப்படி கட்சிகளுக்கு ஆசனங்கள் உரியதாகும்.
- வேட்பாளர் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் உறுப்பினர் தெரிவு செய்யப்படுதல்
- அதிக வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு மேலதிக (போனஸ்) ஆசனம் வழங்கப்படும்.

3. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு
- முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படும்.
- இத்தேர்தலின்போது வாக்காளர்கள் ஒரு விடயம் தொடர்பாக ஆம்; அல்லது இல்லை; என்று வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். - இதன் பொருட்டு இரண்டு இலச்சினைகள் பயன்படுத்தப்படும்.

(iv) A - பாராளுமன்றம்
1. பாராளுமன்றத்தைக் கூட்டுதல்
2. பாராளுமன்றத்தைக் கலைத்தல்
3. புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்குத் தலைமை வகித்தல்
4. பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தல்

B - அமைச்சரவை
1. அமைச்சரவையில் தலைமைப் பதவிவகித்தல்
2. பிரதம மந்திரியை நியமித்தல்
3. அமைச்சர்களை நியமனம் செய்தல்
4. அமைச்சரவையை மாற்றியமைத்தல்

#### பகுதி III

07) (i) இந்திரன், பூமி, வருணன், அக்கினி, யமன்

(ii) A - அஜாசத் B - மகா பத்ம நந்தன்
C - சந்திரகுப்த மௌரியன் D - கனிஷ்கன்

iii) பரம்பல் :- விவாகம் - கோசல மன்னனின் சகோதரியை விவாகம் செய்து காசியைப் பெற்றுக் கொள்ளல்
யுத்தம் - பிரம்மதத்த மன்னனுடன் போரிட்டு அங்க தேசத்தைக் கைப்பற்றுதல்

(iv) கல்வி
- குருகுலக் கல்வி முறை நிலவியமை
- பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய முப்பிரிவினருக்கு மட்டுமே கல்வியைப் பெறும் உரிமை இருந்தமை
- பிராமணர்களுக்கு மட்டும் கற்பிக்கும் உரிமை இருந்தமை
- நாலந்தா, வலபி பல்கலைக்கழகங்கள் வளர்ச்சி அடைந்தமை
- பரந்த விட்யப் பரப்புடன் (கலைத்திட்டம்) கல்வியைப் பெறக்கூடியதாக இருந்தமை
- இலக்கணத்தைப் பிழையின்றிக் கற்றல் கல்வியின் அடிப்படையாக அமைந்தமை

இலக்கியம்
- சமஸ்கிருத இலக்கியம் வளர்ச்சியுற்றமை
- புராண நூல்களைப் பின்பற்றி எழுதப்பட்ட உப புராணங்கள் 18 இருந்தமை
- நவரத்தினங்கள் என்றழைக்கப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இக்காலத்தில் இருந்தமை
- காளிதாசர் போன்ற மகா கவிஞர்கள் இருந்ததுடன் இரகுவம்சம், மேகதூதம், சாகுந்தலம், குமார சம்பவம் போன்ற சிறந்த நூல்கள் எழுதப்பட்டமை
- நாடகம், வர்ணனைகள், தத்துவம், கணிதம், தர்க்க நூல்கள் என்பன எழுதப்பட்டமை

08) (i) A - நிக்கலஸ் கொப்பர்னிகஸ் B - ஜொஹென்ஸ் கெப்லர்
C - கலிலியோ கலிலி

(ii)
- உலகியல் மயமாதல்
- செல்வந்தர் கலைஞர்களுக்கு ஆதரவு வழங்குதல்
- தனிநபர்களுக்கு முக்கியத்துவமளித்தல்
- திறமையை வெளிக்கொணரக் கூடியதாக இருந்தமை

(iii) அரசியல்
- ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா ஆகிய பிரதேசங்களில் ஐரோப்பியரது ஆதிக்கம் பரவுதல்
- குடியேற்றங்களைக் கொண்ட பேரரசுகள் உருவாகியமை
- குடியேற்றங்களை நிறுவுவதில் போட்டி ஏற்பட்டமை
- குடியேற்றங்கள் தோன்றியமை

பொருளாதாரம்
- சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியுறல்
- கைத்தொழில் புரட்சி காரணமாக உற்பத்தி அதிகரித்தமை
- பொருட்களின்பாவனை அதிகரித்ததால் வாழ்க்கை மட்டம் உயர்நிலை அடைந்தமை
- முன்னேற்றமடைந்த நாடுகள், முன்னேற்றமடையாத நாடுகள் என உலகில் இரு பிரிவுகள் தோன்றியமை
- கப்பல் துறை வளர்ச்சியுற்றமை (கடற் பயணங்கள்)
- கீழ் நாடுகளில் வர்த்தகத் தலைமை நிலையங்கள் தோன்றியமை... போன்றன

(iv) (அ) - மாட்டின் லூதர், ஜோண் கல்வின், உல்ரிச் சுவிங்ளி, ஜோண் ஹஸ், ஜோண் வைக்ளிப், இராஸ்மஸ்

(ஆ) - ஐரோப்பாவில் சமய ஒற்றுமை சீர்குலைந்தமை
கிறிஸ்தவ சபை பல பிரிவுகளாகப் பிரிந்தமை
புனித உரோமைப் பேரரசின் அதிகாரம் வீழ்ச்சியுறல்
பிரதேச சிற்றரசர்கள் வலிமை பெறல்
மதம் பரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல்

09) (i) பால கங்காதர திலகர், லாலா லஜ்பதிராய், பிபின் சந்திரபோல்

(ii)
- ஆங்கிலேயர் இந்தியாவின் பிரதேசங்களை இணைக்கும்போது வஞ்சகமாக செயற்பட்டமை
- இந்தியத் தலைவர்களை மதியாமை
- இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களுக்கு இடையே தொடர்பு ஏற்பட்டமை
- பிரித்தானியர் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கு உதவி வழங்கியமை
- இந்தியாவின் வளங்கள் பிரித்தானியாவுக்குக் கொண்டு செல்லப்படல்
- இந்தியாவின் தேவைகள் கவனிக்கப்படாமை
- ஆப்கானிஸ்தானிலும் ஏனைய பிரித்தானியக் குடியேற்றங்களிலும் ஈடுபட்ட போர்களில் சிப்பாய்களை ஈடுபடுத்தியமை
- போர் வீரர்களுக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்தி பரவியமை

(iii)
- சத்தியாக்கிரக இயக்கம் - ஒத்துழையாமை இயக்கம்
- சிவில் சட்டங்களை மீறும் இயக்கம் - ஆர்ப்பாட்ட இயக்கம்

(iv)
- வர்த்தக நடவடிக்கைகள் முதலிடம் பெறல்
- முதலாளித்துவப் பொருளாதாரம் வளர்ச்சியுறல்
- கைத்தொழில் மயமாதலில் விசேட கவனம் செலுத்தப்படல்
- நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்பு வலயமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல்
- புகையிரதப் பாதைகள், தந்தித் தொடர்புகள், கப்பல், பாரிய இயந்திர சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் அரசாங்கத்தைப் போன்று தனியார் துறையும் ஈடுபட்டமை
- மேற்கு நாடுகளின் முன்னேற்றகரமான தொழில்நுட்பம் ஜப்பானில் செயற்படத் தொடங்கியமை (மேற்கு நாடுகளின் தொழில்நுட்பம் இறக்குமதி செய்யப்பட்டமை)

10) (i) A - பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா

(ii)
- அல்சேஸ், லொறைன் பிரச்சினை
- பிஸ்மார்க்கின் உடன்படிக்கைக் கொள்கை
- குடியேற்றங்கள் தொடர்பான போட்டி
- கிழக்கு ஐரோப்பாவில் நிலவிய மோசமான அரசியல் நிலை
- ஜேர்மனியின் பேரரசுக் கொள்கை
- ஐரோப்பா இரு அணிகளாகப் பிளவுபட்டமை
- சரஜிவோ சம்பவம்

(iii)
- ஐக்கிய அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காமை
- ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு சர்வதேச சங்கத்தின் அங்கத்துவம் கிடைக்காமை
- சர்வதேச சங்கத்திற்குப் படை இன்மை
- உலக சமாதானத்தைப் பாதுகாப்பதே நோக்கமாக இருந்தாலும், அடுத்தவரின் நலனுக்காகத் தனது நேரத்தையும், பணத்தையும் செலவிடுவதை அங்கத்துவ நாடுகள் விரும்பவில்லை
- ஆயுதங்கள், இராணுவம் என்பன தொடர்பாக செய்யப்பட்ட சத்தியப் பிரமாணம் பின்னர் நடைமுறைப்படுத்தப்படாமை
- ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சங்கம் தவறியமை

(iv)
- பர்ளின் பிரச்சினை - சுயெஸ் கால்வாய்ப் பிரச்சினை
- கியூபாவின் ஏவுகணைப் பிரச்சினை - கொரியப் பிரச்சினை

◆ ◆ ◆

## யோகாசன வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையால் யோக பாடசாலை தொடங்கும் திட்டத்தின் கீழ் இலவச யோகாசன வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. இவ்யோகா வகுப்புக்கள் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு ஈசான மடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ.ஜெயபாலசுந்தரக்குருக்கள் ஆசியுரையினை வழங்குவார். பிரதம விருந்தினராக பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலாளர் கே.ஜெயக்குமார், யோகாசன ஆசிரியர்களாக பிரபல யோகா, கராத்தே ஆசிரியர் மா.இரத்தினசோதி மற்றும் அவரது முதுநிலை மாணவன் கி.துளசிதாஸ், சிறப்பு ஆலோசகர்களாக டாக்டர் திருமதி முல்லை பரமேஸ்வரன், டாக்டர் தம்பிஐயா காண்டீபன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# சீனாவின் புதிய நகர அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் பொருளாதார விருத்தியினை உறுதி செய்யலாம்

## பிரதமர் ரணில் நம்பிக்கை



**சீனாவின் புதிய நகர அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக இலங்கையின் பட்டுப் பாதையின் பொருளாதார விருத்தியினை உறுதி செய்துகொள்ள முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் சீனாவின் சொய்ங்சிங்- சிங்கப்பூர் மாநகரின் தொழில்நுட்ப பூங்காவை பார்வையிட்ட பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது சீனாவின் பொருளாதார பட்டுப்பாதையின் வளர்ச்சி தொடர்பிலும் சொய்ங்சிங் பெருநகரம் அபிவிருத்தி மார்க்கங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளினால் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் பொருளாதார அபிவிருத்தி பெறுபேறுகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அத்தியட்சகர் ஜெனரல் ஹன் பச்சாங் ஆகியோருக்கிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதுடன் குறித்த திட்டத்தின் மூலமாக இலங்கையின் கடல்மார்க்க மற்றும் துறைமுக அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் பிரேரணைகள் தொடர்பிலும் சொங்சிங் தொழில்நுட்ப நகர மற்றும் வரலாற்று தொடர்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. குறித்த பேச்சுவார்த்தை மூலம் சீன நிதிய மைச்சிடம் இருந்து ஆலோசனை பெறப்படவுள்ளதோடு பொருளாதாரம், வர்த்தகம், அரசியல் தொலைத் தொடர்பாடல், அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் பல தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கருத்து தெரிவிக்கும் போது குறித்த அபிவிருத்தி திட்டம் மூலமாக பிராந்தியங்களுக்கிடையிலான அபிவிருத்தி திட்டங்கள் வலுவடைவதோடு அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் எமது அரசாங்கம் வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கட்சியை பிளவடையச் செய்யவே பாதயாத்திரை நடத்தப்பட்டது!

## ஜனாதிபதி குற்றச்சாட்டு



(கொழும்பு)

கட்சியைப் பிளவடையச் செய்யவே பாதயாத்திரை நடத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சியினால் நடத்தப்பட்ட பாத யாத்திரைப் போராட்டம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவல்ல. கட்சியை பிளவடையச் செய்யவேயாகும்.

இவ்வாறான பாதயாத்திரைகளை நடத்துவதனால் அரசாங்கம் மேலும் பலமடையும். வலுவான அடிப்படையில் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தை பாதயாத் திரைகளினால் அசைக்க முடியாது.

பாத யாத்திரையின் பின்னர் அரசாங்கத்திலும் கட்சியிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றேன்.

நாட்டின் வரலாற்றில் காலத்திற்குக் காலம் சவால்கள் ஏற்பட்ட போதிலும், மக்களின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

நல்லாட்சி அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சிரத்தை காட்டி வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7-10)

## நீரிழிவு நோய் சம்பந்தமான வைத்திய ஆலோசனை நிகழ்வு

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஒன்றுகூடலும் நீரிழிவு நோய் சம்பந்தமான வைத்திய ஆலோசனை நிகழ்வும் நாளை 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

வைத்திய ஆலோசனையை கொழும்பு ஓய்வு நிலைவைத்திய நிபுணர் டாக்டர் வைத்தீஸ்வரன் வழங்குவார். (இ-3)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 810

தர்சினி

எல்லா கஷ்டங்களும்
தீர்ந்த பிறகு தான்
சிரிப்பேன் என
நினைத்துக்
கொண்டிருந்தால்
சாகும்வரை எவராலும்
சிரிக்கவே முடியாது..!



தர்சி



உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.

சிந்து

சூப்பர் கவிதை



நீ ஒரு இட்லி
உனக்கு நான்தான் சட்னி
நீ ஒரு பொங்கல்
உங்க அப்பா எனக்கு அங்கிள்
நீ ஒரு தயிர்
ஆனா நீ என்னோட உயிர்
நீ ஒரு ரசம்
என்னை லவ் பண்ணாட்டி
உனக்கு வைப்பன் விஷம்
நீ ஒரு பராட்டா
இப்பவே உன்ன பாக்க வரட்டா

நிலவன்

கடவுள் உன்னைச்
சோதிக்கின்றார் என்றால்
கவலைப்படாதே...
சிரித்துக்கொண்டு
ஏற்றுக்கொள்
ஏனென்றால் சோதிக்கத்
தகுதியானவாக உன்னைத்
தேர்ந்தெடுத்துள்ளார் என்று

வின்ஜக்சன்



காதலி, மனைவி இவங்களைப் பற்றி
எல்லாம் நீ என்ன நினைக்கிறாய்
இல்லாததையும் பொல்லாததையும்
பற்றி ஏன்டா பேசணும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடைகளை மூடுவதன் மூலம் ஆட்சியை கவிழ்க்க முடியாது

## நிதியமைச்சர் ரவி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**கடைகளை மூடி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதன் மூலம் ஆட்சியை கவிழ்க்க முடியாது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டு மக்களுடைய உண்மை நிலையினைப் புரிந்து கொண்டு அதற்கான தீர்வினைபெற்றுக் கொடுப்பது மக்களிடம் நேரிடையாக சென்று கலந்துரையாடுவதன் மூலமே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

அதைவிடுத்து கொழும்பில் இருந்து கொண்டு அறிக்கைகளையும்,சுற்றுநிருபங்களையும் வெளியிடுவதன் மூலம் மக்கள் பிரச்சினையை தீர்க்க முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், விலச்சி மற்றும் கொக்கிச்சி பிரதேச மக்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அமைச்சர் ரவி கருணாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இங்குள்ள விவசாயிகளைச் சந்தித்த அமைச்சர் அவர்களது உரம், தொழில்நுட்ப கருவிகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டை கட்டியெழுப்ப நிதி தேவைப்படுவதாகவும், அதற்காக வரி அறவிடுவது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ள அமைச்சர், குறித்த வரியினை வீணாக்காமல் மக்களுக்காக செலவு செய்வது அரசின் பொறுப்பென்றும் அதற்காகவே அரசு செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மாலபே வைத்திய கல்லூரி மாணவர்களுக்கு நட்டஈடு

மாலபே தனியார் வைத்திய கல்லூரியில் தற்போது கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் மாணவர்களுக்கு நட்டஈடு பணம் வழங்குவதற்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் குறித்த யோசனையை முன்வைத்துள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் நட்டஈடு பணத்தைக் கொண்டு மாணவர்கள் தமது வைத்திய பட்டப்படிப்பை வெளிநாடுகளில் கற்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என அகில இலங்கை வைத்தியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் குறித்த நட்டஈட்டு பணம் வழங்கப்பட்டதன் பின்பு மாலபே ஸ்வைத்திய கல்லூரியை விடுமாறும் இந்த சங்கத்தின் செயலாளர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் உள்ள பல்கலைக்கழக கொள்கைகளை ஏமாற்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள மாலபே வைத்திய கல்லூரி மூடப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7-10)

# சந்தைகளில் நேற்றைய விலை

| [illegible] | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| வகைகள் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 300 | 200 |
| தக்காளி | 50 | 50 | 30 | 60 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 50 | 80 | 120 | 80 | 100 |
| கோவா | 100 | 100 | 70 | 160 | 120 | 120 |
| கரட் | 120 | 200 | 100 | 160 | 160 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 60 | 60 | 60 |
| புடோல் | 40 | 20 | 20 | 60 | 40 | 50 |
| வாழைக்காய் | 100 | 60 | 90 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 | 70 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 65 | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 140 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 | 80 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 160 | 160 | 150 |
| பயற்றங்காய் | 30 | 20 | 20 | 40 | 40 | 70 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 40 | 80 | 70 |
| கறிமிளகாய் | 200 | 100 | 150 | 200 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 100 | 30 | 100 | 120 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 100 | 150 | 200 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 50 | 60 | 50 | 70 |
| கீரை - 1பிடி | 10 | 10 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 | 160 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 100 | — | 140 | 120 | 160 | 150 |
| முள்ளங்கி | 30 | — | 20 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 30 | 30 | 30 | 50 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் விடுலைப்புலிகள் 253

இந்த நிலையில் இந்த அறிவிப்பை மீறி இராணுவம் பாதுகாப்பு வளைய பகுதியில் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப்புலிகள் ஆதரவு இணையத்தளம் செய்தி வெளியிட்டது.

27-04-2009 அன்று வலைஞர் மடத்தில் அனைத்து வகையான ஆயுதங்களையும் பயன்படுத்தி இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் விடுதலைப்புலிகளின் 2 பாதுகாப்பு அரண்கள் தகர்க்கப்பட்டன. அங்கு ஏராளமான கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டு இருந்தன. அந்த இடத்தை இராணுவம் கைப்பற்றியதால் விடுதலைப் புலிகள் முள்ளி வாய்க்கால் பகுதியை நோக்கி ஓடினர்.

இன்நிலையில் 28-04-2009 அன்று அதிகாலை 4.30 மணிக்கு முள்ளி வாய்க்காலில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் இராணுவம் தனது கடுமையான தாக்குதலைத் தொடங்கியது. பீரங்கிகள், பல்குழல் ரொக்கெட் லாஞ்சர்கள், கனரக பீரங்கிகள், ஆர்.பி.ஜி., கனரக துப்பாக்கிகள் ஆகியவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தியது.

### பதுங்கு குழியில் புகுந்தனர்

இதனால் அங்கிருந்த தமிழர்களும், மருத்துவ குழுவினரும் பதுங்கு குழிக்குள் சென்று மறைந்து கொண்டனர்.

இருப்பினும் ஏராளமானோர் மீது குண்டுகள் விழுந்தன. காயம் அடைந்து விழுந்தவர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு இடைவிடாமல் தாக்குதல் நடந்தது. இதனால் காயயமடைந்தவர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்தனர். இந்தத் தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் பலியாகி விட்டதாக மருத்துவ குழுவினர் தெரிவித்தனர்.

வடக்குப் பகுதியில் போர் முடிந்து விட்டது என்று ஜனாதிபதி மாளிகை அறி வித்தது. விடுதலைப்புலிகள் 4 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குள் முடக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட சில இடங்களில் மட்டுமே விடுதலைப் புலிகள் இருந்தனர். மொத்தம் 4 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் விடுதலைப் புலிகள் சுற்றி வளைக்கப் பட்டனர். அந்தப் பகுதியில் 50 ஆயிரம் தமிழர்கள் இருப்பதாக ஐ.நா.சபை தெரிவித்தது. ஆனால் இங்கு 1 1/2 இலட்சம் தமிழர்கள் இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

அங்கு விமானம் மூலம் குண்டுகளை வீசியும் கனரக பீரங்கிகளைக் கொண்டும் இராணுவம் தாக்குதல் நடத்தியதால் பெரும் அளவில் உயிரிழப்பு ஏற்பட்டது. இதற்குப் பல்வோறு உலக நாடு கள் எதிர்ப்பு தெரிவித்தன.

சர்வதேச அளவில் இது போன்ற நெருக்கடி தொடர்ந்ததால் கடுமையான தாக்குதல்களை நிறுத்துவதாக அரசு 27-04-2009 அன்று அறிவித்தது.

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கை

இது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலுவலகத்தில் இருந்து வெளியான அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது, வடக்குபகுதியில் போர் முடிந்து விட்டது. எங்களுடைய இலக்கை எட்டிவிட்டதால் கடுமையான தாக்குதல்களை நிறுத்த அரசு முடிவு செய்துள்ளது. கனரக பீரங்கிகள் விமானத்தாக்கு தல்கள் எறிகணை மற்றும் ஏவுகணைகளை வீசுவது யோன்ற தாக்குதல்களை நடத்தவேண்டாம் என்று இராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

அத்தகைய தாக்குதல்களால் அப்பாவி மக்களின் உயிர்களுக்கு அதிக அளவில் சேதம் ஏற்படும் என்பதனால் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதே நேரத்தில் விடுதலைப்புலிகள் பிடித்த வைத்துள்ள அப்பாவி மக்களை மீட்கும் பணிகளை இராணுவம் தொடர்ந்து மேற் கொள்ளும். அவர்களிடம் சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பிற்கு அதிக முன்னுரிமை கொடுக்கப் படும்.

இவ்வாறு ஜனாதிபதி அலு வலக அறிக்கையில் கூறப்பட் டிருந்தது.

### போர் நிறுத்தமா?

மேலும் அரசு போர் நிறுத்தம் செய்ததாக வெளியாகும் தகவல்களுக்கு இரா்ணுவம் மறுப்பு தெரிவித்தது. இது குறித்து இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது,

விடுதலைப்புலிகள் பிணைக் கைதிகளாக பிடித்து வைத்து இருப்பவர்களில் மீதம் உள்ள 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களை மீட்பதற்கான மனிதாபிபமான நடவடிக்கைகளை இராணுவம் தொடர்ந்து மேற்கொள்ளும். ஒரு அப்பாவி உயிர் கூட பலியாகி விடக்கூடாது என்பதை கடுமையாக கடைபிடிக்கும் விதமாக அங்கு கனரக ஆயுதங்களை பயன்படுத் துவதில்லை என்று தீர்மானித்திருக்கிறோம்.


அரசின் இந்த முடிவை போர் நிறுத்த அறிவிப்பு என்று தவறாகப்பிரசாரம் நடத்தப்படுகிறது. அரசாங்கத்தின் உண்மையான அறிவிப்பை முற்றிலுமாக திசை திருப்பி போர் நிறுத்தம் என்ற செய்தி பரப்பி இருப்பது முறையற்ற செயலாகும். விடுதலைப்புலிகளையும் அவர்களது அரசியல் ஆதரவாளர்களையும் திருப்திப்படுத்துவதற்காக இவ்வாறு செய்கிறார்கள்.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற எங்கள் முடிவு எந்த் ஒரு நாட்டின் வற்புறுத்தலின் பேரில் எடுக்கப்பட்டது அல்ல மக்களைப் பாதுகாப்பதற்காக மீட்க வேண்டும் என்பதால் தான் நாங்கள் இந்த முடிவை மேற்கொண்டிருக்கிறோம். இவ்வாறு இராணுவம் அறிவித்தது.

### 2 ஆயிரம் பேர் பலி

இந்த நிலையில் 09-05-2009 அன்று இரவில் இராணுவம் நடத்திய தாக்குதலில் 2 ஆயிரம் அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் குற் றச்சாட்டை மறுத்துள்ள இராணுவம் அரசு மீது பொய் ப்பிரசாரத்தை விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்றனர் என்று தெரிவித்தது. விடு தலைப்புலிகள் வசம் இருந்து மக்களை மீட்கும் பணிகளில் இராணுவம் தொடர்ந்து முன்னேறி வருவதாகவும் 09-05-2009 அன்று நடத்திய தாக்குதலில் முள்ளிவாய் க்கால் பகுதியை இராணுவம் பிடித்ததாகவும் கூறியது.



(தொடரும்)

# விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதியாக இருந்த கொமடோர் அஜித் போயகொடவின் அனுபவங்கள்

எங்களைப் பார்ப்பதற்காக விருந்தினர் ஒருவர் வருவதாக எம்மிடம் கூறப்பட்டது. நாங்கள் விருந்தினரைச் சந்திப்பதற்காக எமது சிறைக் கூடங்களிலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டு மரம் ஒன்றின் கீழ் வட்டமாக அமருமாறு கூறப்பட்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறையில் ஒரு தலைவராகச் செயற்பட்ட கரிகாலன் எம்முடன் உரையாடுவதற்காக அங்கு வந்திருந்தார். சிறையிலிருந்த எம்மை விடுதலை செய்வதற்கு அவர்களுக்கு நாங்கள் உதவவேண்டும் என கரிகாலன் எம்மிடம் கேட்டார்.

கைதிகளை விடுவிப்பதற்கான சமரசப் பேச்சுக்களுக்காக பிரதிநிதி ஒருவரை அனுப்புமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை எழுதுமாறு கரிகாலன் எம்மிடம் தெரிவித்தார்.

உண்மையில் இந்த உரையாடல் முழுவதையும் என்னால் பூரணமாக நினைவுபடுத்த முடியாவிட்டாலும் கூட, இதுவே அதன் சாராம்சமாக இருந்தது. இந்த முயற்சி வெற்றி பெற்றால், அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான தயார்படுத்தலில் தாம் ஈடுபடுவோம் எனவும் கரிகாலன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த மூன்று புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டால் 24 பேரைக் கொண்ட எமது குழுவைத் தாம் விடுவிப்பதாகவும் புலிகள் தெரிவித்தனர். இதற்கான கடிதத்தை எழுதுவதில் நாமும் ஆர்வம் கொண்டோம்.

ஏனெனில் எம்மை விடுதலை செய்வதற்கான எவ்வித நகர்வுகளும் இடம்பெறவில்லை என்பதை நாம் கண்டுணர்ந்தோம். அமைதித் தீர்வு ஒன்று எட்டப்பட்டால் மட்டுமே நாங்கள் விடுவிக்கப்படுவோம் என்பதை மட்டுமே எம்மால் கற்பனை செய்ய முடிந்தது. இதனால் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை எழுத நாம் சம்மதித்தோம்.

நாங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு எழுதிய கடிதம் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பாக நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்காக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் வழங்கப்பட்ட பதிலானது இவ்வாறான ஒரு குழு கைது செய்யப்பட்ட விவகாரம் தனக்குத் தெரியாது என்பது போல் அமைந்திருந்தது.

இந்தக் கைதிகள் மரணித்த வீரர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டதாக அரசாங்கம் கருதியதாகக் கூறுமாறு பாதுகாப்புச் செயலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

எனினும், புத்தக விற்பனையாளரான விஜித யாப்பா, அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக Newsweek மற்றும் National Geographic ஆகியவற்றின் பிரதிகளை எனக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அரசாங்கத்தின் பதிலானது இரக்கமற்றதாகவும் அலட்சியம் நிறைந்ததாகவும் இருந்ததை நினைத்து நான் ஆச்சரியப்பட்டிருக்கக் கூடாது என நான் நினைக்கிறேன். இராணுவ வீரர்கள் பிற வீரர்கள் இல்லாதவிடத்து அந்த இடத்தை நிரப்பீடு செய்யக் கூடிய வகையில் உருவாக்கப்படுகிறார்கள். உலகில் உள்ள எந்தவொரு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களும் அவர்களது ஓய்வின் பின்னரும் இன்றும் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றனர் என்பதைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

முன்னாள் அல்லது சேவையிலிருந்த இராணுவ வீரர்களால் இழைக்கப்பட்ட குற்றச் செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்களை எடுத்துப் பாருங்கள். சிறையில் அடைக்கப்பட்ட கைதி ஒருவரிடம் அவரது அரசாங்கம் அவரது விடுதலைக்காக எந்தவொரு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்று கூறினால் அதன் தாக்கம் எவ்வாறிருக்கும் என்பதைக் கேட்டுப் பாருங்கள். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவொரு சமரசத்தையும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்பதற்கான சமிக்ஞையை அரசாங்கம் அனுப்பியது.

உண்மையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த மூன்று புலி உறுப்பினர்களும் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர். ஏனெனில் இவர்களை சட்டரீதியாகத் தொடர்ந்தும் தடுத்து வைக்க முடியாது என்பதனால் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

நாங்கள் பெரியமடுவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, முல்லைத்தீவில் யுத்தம் இடம்பெற்றது. வழமை போன்று எமது சிறைக் காவலர்கள் மகிழ்ச்சியுடன் யுத்தத்தில் வெற்றி பெற்றதைக் கூறினார்கள்.

முல்லைத்தீவிலிருந்த இராணுவ முகாமைப் புலி



கள் முற்றுமுழுதாக அழித்தனர். இதில் 1200 இராணுவ வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். புலிகள் தரப்பில் யுத்த ரீதியான வெற்றிகள் கிடைத்த வேளைகளில் அவர்கள் பேசுவதற்குத் தயாராக இருந்தனர். அவர்களது தரப்பில் இழப்புக்கள் ஏற்பட்ட வேளையில், அவர்கள் அமைதியுடன் இருந்தனர்.

பெரியமடுவில் நாங்கள் இருந்தபோது ஒருநாள், தமிழீழ விடுதலைப் புலிகள் வெலிஓயா முகாம் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இவர்களது தாக்குதல் திட்டங்கள் தொடர்பான தகவலை இராணுவம் முன்னரே அறிந்து கொண்டது. இதனால் புலிகள் தமது முகாமிற்குள் நுழையும் வரை காத்திருந்த இரா ணுவத்தினர் அவர்கள் மீது எதிர்த் தாக்குதலை மேற் கொண்டனர். இதில் இருநூறு அல்லது முந்நூறு வரையான பெண் போராளிகள் கொல்லப்பட்டனர் என நான் நினைக்கிறேன்.

இதனால் புலிகள் எம்மீது தமது அதிருப்தியை காண்பித்தனர். .அதாவது எமக்கான உணவு நேரந் தவறி வழங்கப்பட்டது. அத்துடன் உணவு ருசியற்றதாகவும் காணப்பட்டது. எமது சிறையில் மேலும் சிறைக்காவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் எம்மை வந்து பார்க்கும் வரை புலிகளின் இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை எங்களால் அறியமுடியவில்லை. அதன் பின்னர் நாங்கள் செய்தித்தாள்களை வாசித்து உண்மை நிலையை அறிந்து கொண்டோம்.

ஆனால் பொதுவாக புலிகளின் சிறைக்காவலர்கள் எம்முடன் மிகவும் நட்புடன் பழகுவார்கள். நாங்களும் ஒரு குழுவாக சிறையில் இருந்ததால் தனிமை என்ற உணர்வைப் பெற்றிருக்கவி ல்லை. மூத்த மற்றும் வயது கூடியவர் என்ற வகையில் அந்தக் குழுவைத் தலைமை தாங்கும் பொறுப்பும் எனக்கு ஒப்படைக்கப்பட்டது.

நான் ஒரு தொழிலைப் பெற்றுக் கொண்டது போன்ற உணர்வைக் கொண்டிருந்தேன். தற்போது எனக்கு அதிக வேலை இருந்தது. அது மட்டுமே என்து மனதை ஆக்கிரமித்திருந்தது. இது என்னை மனதளவில் பல்வேறு மாற்றத்திற்கு உட்படுத்தியிருந்தது. அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் எம்மைப் பார்க்க வருகின்ற நாட்கள் தவிர்ந்த மற்றைய நாட்களில் எனது குழுவைச் சேர்ந்த அனைவரையும் சந்திப்பதற்கான அனுமதி எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் சிலவேளைகளில் எமக்கு அருகிலுள்ள சிறைக் கூண்டுகளிலிருந்து மற்றைய சிறைக் கைதிகள் பேசுவது எமக்குக் கேட்கும். எம்மைக் கண்காணிப்பதற்கு எமக்கு அருகில் எவரும் இல்லை என்ற சந்தர்ப்பங்களில் நாங்கள் சிறைக்கம்பிகளின் ஊடாக உரையாடுவோம்.

எம்மைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்ட சிறைக் காவலர்கள் எம்மீது நம்பிக்கை கொண்டிருந்தனர் என நான் நினைக்கிறேன். ஆனால் அவர்கள் எமது சிறைக் கூண்டுகளைத் தொடர்ந்தும் கண்காணித்துக் கொண்டேயிருப்பார்கள். இது நாங்கள் சிறைக்கைதிகள் என்பதைத் தொடர்ந்தும் நினைவுபடுத்துவதாக இருக்கும்.

எமக்குப் பரிச்சயமான புலி உறுப்பினர்களையும் நாங்கள் பார்க்க முடிந்தது. நாம் தடுத்து வைக்கப்பட்ட சிறைக்கு கபிலன் என்பவர் பொறுப்பாக இருந்தார்.

ஆனால் அவர் அரிதாகவே எம்மை வந்து பார்ப்பார். நாங்கள் கிட்டத்தட்ட கைவிடப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்தோம். செல்வரட்ணம் என்பவர் எம்மை ஒவ்வொரு நாளும் வந்து பார்ப்பார். எமக்குக் காவலாக இருந்தவர்களில் சிலர் இளவயதினர். அவர்களுக்கு பதினெட்டு வயது கூட இருக்காது என நான் நினைக்கிறேன்.

அவர்கள் எம்மீது சிறிது நம்பிக்கை கொண்டி ருந்தனர். அதேபோன்று நாங்களும் அவர்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால் எப்போதும் எமது சிறைக்கூண்டின் வாசலில் ஆயுதம் தரித்த ஒரு காவலாளி நிற்பார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாறான விரிவான சிறை வலைப்பின்னலைக் கொண்டிருந்தனரா என்பது ஒரு ஆச்சரியப்படத்தக்க விடயமாகும். இந்த சிறைகள் பல்வேறு நோக்கங்களுடன் அமைக்கப்பட்டிருந்தன. அதாவது புலிகள் தமது தேசத்துரோகிகளைத் தடுத்து வைப்பதற்காகவும், அமைப்பிற்குள் பிரச்சினைக்கு உள்ளாகும் புலி உறுப்பினர்களைத் தடுத்து வைப்பதற்காகவும், ஒழுக்கத் தவறாக நடந்து கொள்ளும் பொதுமக்கள் மற்றும் வேற்று ஆயுதக் குழுக்களுடன் தொடர்பைப் பேணுபவர்கள் போன்ற பல்வேறு தரப்பினர்களையும் அடைத்து வைப்பதற்காகவே புலிகள் இவ்வாறான சிறைகளை உருவாக்கியிருந்தனர்.

நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறையின் மூலையிலிருந்த சிறைக்கூண்டில் பெரிய உருவத்தைக் கொண்ட மனிதர் ஒருவர் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் பார்ப்பதற்கு அமைப்பொன்றின் தலைவர் போன்றிருந்தார். நான் அவர் யார் என வினவியபோதும் எவரும் எனக்குப் பதிலளிக்கவில்லை.

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என நான் நினைக்கிறேன். பின் னர் ஒருநாள் அவர் அங்கிருந்து வேறிடம் சென்றுவிட்டார்.

நாங்கள் பெரியமடுவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இலங்கை உலகக் கிண்ணக் கோப்பையை வென்றெடுத்திருந்தது.

இதனை எமக்குக் காவலாளியாக இருந்த புலி உறுப்பினர் ஒருவரே தெரிவித்திருந்தார். அவர்களும் இலங்கை வெற்றி பெற்றதை நினைத்து ஆச்சரியம் அடைந்திருந்தனர். துடுப்பாட்டம் என்ற வகையில் புலிகள் அமைப்பினரும் விதிவிலக்காக இருந்தனர்.

அவர்கள் இதனை இலங்கை அணி என அழைக்கவில்லை. அவர்கள் ஒருபோதும் நாட்டின் புதிய பெயரைப் பயன்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் இலங்கையின் துடுப்பாட்ட அணிக்கு ஆதரவளித்தனர். அவர்கள் சனத் ஜெயசூரிய மற்றும் அர்ஜுண ரணதுங்கவின் மிகப் பெரும் ரசிகர்களாக இருந்தனர். முத்தையா முரளிதரன் என்கின்ற தமிழர் ஒருவர் புதிதாக துடுப்பாட்ட அணியில் இணைந்துள்ளமை தமக்குப் பெருமையாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தம்மிடம் இருந்த சிறிய வானொலியில் உலகக் கோப்பை அணியின் இறுதி நாள் நேரடி வர்ணனையைக் கேட்பதற்கு புலிகளின் சிறைக் காவலர்கள் எம்மை அனுமதித்தனர். உண்மையில் அவர்கள் வைத்திருந்த வானொலியின் ஒலிபரப்பை எம்மால் சரியாகக் கேட்க முடியவில்லை. ஆனாலும் அந்தத் தருணம் உண்மையில் மறக்க முடியாத ஒன்றாகும். அதற்கு முன்னர் ஒருபோதும் உலகக் கோப்பையின் இறுதி ஆட்டத்திற்கு ஒருபோதும் தெரிவாகியிருக்கவில்லை. எங்களில் பெரும்பாலானவர்கள் துடுப்பாட்ட வீரர்களாக இருந்தோம். உலகக் கோப்பையை வென்றெடுத்த போது, சிறைக் காவலர்கள் எம்முடன் இணைந்து ஆரவாரித்தனர்.

ஆனால் அதன் பின்னர் பல நாட்கள் வழமை போன்று கழிந்தது. பின்னர் ஒருநாள் காவலாளிகள் எம்மிடம் வந்து புறப்படுவதற்குத் தயாராகுங்கள் எனக் கூறினார்கள். நாங்களும் புறப்பட்டோம். ட்ரக் வண்டி ஒன்றில் நாங்கள் ஏற்றப்பட்டோம். பின்னர் நாங்கள் விடுவிக்கப்பட்டோம்.

குறிப்பு

(1994 ஆண்டு மன்னார் சிலாவத்துறையில் சாகரவர்த்தன ரோந்துக் கப்பல் மீதான தாக்குதலில், அதன் கட்டளை அதிகாரியான கொமடோர் அஜித் போயகொட கடற்புலிகளால் போர்க் கைதியாகப் பிடிக்கப்பட்டிருந்தார்.

ஆறு ஆண்டுகளின் பின்னர், 2002 ஆம் ஆண்டு அவர், போர்க்கைதிகள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டார். போர்க் கைதியாக புலிகளிடம் இருந்த அனுபவங்களை கொமடோர் அஜித் போயகொட, எழுத்தாளர் சுனிலா கலப்பதி மூலம், “A Long Watch – War Captivity and return in Sri Lanka“ என்ற பெயரில் நூலாக்கியுள்ளார். இந்த நூலின் ஒரு பகுதியே இது.)

ஆங்கிலத்தில் - அஜித் போயகொட (சுனிலா கலப்பதி)
வழிமூலம் - dailyo
மொழியாக்கம் - நித்தியபாரதி

# நா.முத்துக்குமாரின் இறுதிக் கிரியை





தமிழ்த் திரைப்பட துறையின் பிரபல பாடலாசிரியரான நா.முத்துக்குமார் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் காலமானார். காஞ்சிபுரம் மாவட்டத்தின் கன்னிகாபுரத்தில் பிறந்தவர் நா.முத்துக்குமார்.


தொடக்கத்தில் இயக்குநராகப் பணியாற்ற விரும்பி. இயக்குநர் பாலுமகேந்திராவிடம் நான்கு ஆண்டுகள் பணி செய்தவர். சீமான் இயக்கிய வீரநடை படத்தின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமானவர், இதுவரை கிட்டத்தட்ட 1500க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். இரண்டு முறை தேசியவிருது பெற்ற முத்துக்குமார், மஞ்சள் காமாலை நோயால் கடந்த சில நாட்களாக அவதிப்பட்டு வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன்தினம் காலமானார். இவரது மரணம் திரையுலகினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. திரைப்பட பாடல்கள் மட்டுமன்றி. சில்க் சிட்டி, குழந்தைகள் நிறைந்த வீடு உட்பட பல நாவல்களையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)









# 'வாழ்வு மட்டுமா அழகு மரணம் கூடத்தான் அழகு'

## நா.முத்துக்குமாரின் மறைவுக்கு வைரமுத்து இரங்கல்

ஒரு நல்ல பாட்டு முடிந்து விட்டதே என்று வேதனைப்படுகிறேன் என்று மறைந்த நா.முத்துக்குமாருக்கு கவிஞர் வைரமுத்து இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இலக்கியம் அறிந்த ஒரு பாடலாசிரியனைக் காலம் காவு கொண்டுவிட்டது. நா.முத்துக்குமாரின் மறைவுச் செய்தி சற்றும் எதிர்பாராதது. அவர் குடும்பத்தைப் போலவே என்னாலும் தாங்க இயலாதது.

இது சாகும் வயதில்லை. சாதிக்கும் வயது. தன் பாடல்களுக்கு இரண்டு முறை தேசிய விருதுகள் பெற்றவர். அவர் பெறவேண்டிய மூன்றாவது விருதைக் காலம் களவாடிவிட்டது.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்த் திரையுலகில் அதிகம் எழுதியவர். அழகாகவும் எழுதியவர். "மழைமட்டுமா அழகு வெயில் கூடத்தான் அழகு" என்று சொன்னவர், "வாழ்வு மட்டுமா அழகு மரணம் கூடத்தான் அழகு" என்று சொல்லாமல் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

தமிழ்க் கவிஞர் உலகம் வாழையடி வாழையாய்ச் செழிக்க வேண்டும் என்று பேராசை கொண்டவன் நான். இன்று இளங்கன்று ஒன்று தன் வேர்மண்ணோடு வீழ்ந்து விட்டதே என்று விம்மி நிற்கிறேன். ஒரு நல்ல பாட்டு முடிந்துவிட்டதே என்று வேதனைப்படுகிறேன்.

'உன் சொந்த ஊர் எது தம்பி' என்று ஒருமுறை கேட்டேன். "காஞ்சி அண்ணா" என்று சொன்னார். "அண்ணாவே காஞ்சிதான்" என்றேன், கோவையில் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாட்டில் என் தலைமையில் கவிதைபாட வந்தார்.

"சிறந்த வரிகளை அரங்கில் மீட்டு நீ பிறந்த ஊர் காஞ்சி என்பதைக் காட்டு" என்று அவரை அறிமுகம் செய்தேன். இன்று மரணம் அவர் மௌனத்தையே கவிதையாக்கிவிட்டது. அவர் வாழ்ந்த பெருமையை அவர் பாடிய பாடல்கள் பாடிக்கொண்டேயிருக்கும்.

நா.முத்துக்குமாரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கும், கலை உலகத்துக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரணத்தின் சபையில் நீதி இல்லை என்பதை மறுபடி உறுதிப்படுத்திக்கொள்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜிகணேசன் மறைந்தார்

## திரை உலகில் ஒரு சகாப்தம் முடிந்தது

**233**

## (21-07-2001)

*தனது நடிப்பு ஆற்றலால் தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்ற சிவாஜிகணேசன் 21-07-2001 அன்று தமது 74 வது வயதில் மரணம் அடைந்தார்.*

**உடல் நலம் பாதிப்பு**

ஏற்கனவே சிவாஜி கணேசன் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் இருதய துடிப்பை சீர் படுத்த நெஞ்சில் பேஸ்மேக்கர் என்ற கருவி பொருத்தப்பட்டது. பிறகு 5 ஆண்டுகள் அவர் வழக்கமான அலுவல்கள் மேற்கொண்டு வந்தார்.

2001 ஜூலை 12-ம் திகதி சிவாஜிகணேசனுக்கு மீண்டும் உடல்நலக் குறைவு ஏற்பட்டு சென்னை அப்பலோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 21 ஆம் திகதி அவரது உடல் நிலை அபாய கட்டத்தை அடைந்தது. உயிரை காப்பாற்ற வைத்தியர்கள் தீவிரமாக போராடினார்கள்.

**உயிர் பிரிந்தது**

ஆனாலும் சிகிச்சை பலன் அளிக்காமல் இரவு 8-10 மணிக்கு சிவாஜி கணேசனின் உயிர் பிரிந்தது. மனைவி கமலா அம்மாள் மூத்த மகன் ராம்குமார் மற்றும் குடும்பத்தினர் அருகில் இருந்தனர்.

இளைய மகன் பிரபு சினிமா படப்பிடிப்பிற்காக சுவிட்சலாந்து நாட்டிற்கு சென்றிருந்தார். சிவாஜி உடல்நிலை கவலைக் கிடமாக இருக்கும் செய்தி கிடைத்ததுமே அவர் விமானத்தில் இந்தியாவுக்கு புறப்பட்டார். ஆனால் அவர் வந்து சேருவதற்குள்ளாகவே சிவாஜி மறைந்து விட்டார்.

**கடைசி நிமிடம்**

ராம்குமார் கூறும் போது, எனது தந்தை காலைவரையில் பேசிக்கொண்டிருந்தார். கடைசியாக எனது அக்கா சாந்தியிடம் தான் பேசினார். அப்போது வலி தாங்க முடியவில்லையே அம்மா என்று கூறினார். பிறகு படுத்து விட்டார். தூக்கத்திலேயே உயிர் பிரிந்து விட்டது என்று கண் ணீர் மல்க தெரிவித்தார்.

சிவாஜிகணேசன் மரணஞ்; செய்தி அறிந்ததும் ஏராளமான ரசிகர்கள் வைத்தியசாலைக்கு திரண்டனர். தலைவா போய் விட்டாயே என்று கதறியபடி தரையில் விழுந்து புரண்டனர்.

ரஜினிகாந், கமல்ஹாசன் விஜயகாந், விஜய், சத்யராஜ், அர்ஜூன், ராதிகா உட்பட நடிகர்-நடிகைகள் வைத்தியசாலைக்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.



**பிரதமர் இரங்கல்**

பிரதமர் வாஜ்பாய் காங்கிரஸ். தலைவர் சோனியா காந்தி முதலமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஆந்திர முதலமைச்சர் ஏ.கே அந்தோணி, த.மா.கா தலைவர் மூப்பனார் மற்றும் அனைத்து கட்சி தலைவர்களும் இரங்கல் செய்தி வெளியிட்டனர்.

பிரதமர் வாஜ்பாய் வெளியிட்ட இரங்கல் செய்தியில், தமிழ்த்திரை உலகின் மாபெரும் நடிகராக திகழ்ந்த சிவாஜி கணேசன் நடிப்பின் போது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதிலும் மொழியை உச்சரிப்பதிலும் சிறந்து விளங்கியவர் என்று புகழாரம் சூட்டினார்.

கன்னட நடிகர் ராஜ்குமார், நடிகை சரோஜாதேவி ஆகியோர் இரங்கல் தெரிவித்தனர்.

**தலைவர் அஞ்சலி**

சிவாஜி கணேசனின் உடல் சென்னை தியாகராய நகரில் உள்ள அவரது வீட்டில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. நீண்ட கியூவில் நின்று இலட்சக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

முதலமைச்சர் ஜெயலலிதா மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். கமலா அம்மாளுக்கு ஆறுதல் கூறினார்.

புதுச் சேரி முதலமைச்சர் சண்முகம், மூப்பனார், வைகோ, டாக்டர் ராமதாஸ், இல. கணேசன், ஆர். எம். வீரப்பன், திரு நாவுக்கரசர், திருமாவள வன், ப.சிதம்பரம், ஏ.சி. சண்முகம், ஜெயவீர பாண்டியன் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

(தொடரும்..)

மனிதரின் செயல்கள், அவர்கள் சிந்தனை களுக்குச் சிறந்த விளக்கங்களாகும்.
- ஜான் லாக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு ஓர் அன்பு மடல்

புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு அன்பு வணக்கம். புலம்பெயர்ந்தவர்கள் எங்கள் மண்ணை மறந்து விடுவார்களோ! என்ற ஏக்கம் இப்போது மெல்லத் தணிந்து கொள்கிறது.

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தில் உங்களைக் காணும்போது நெஞ்சம் மகிழ்ந்து கொள்கிறோம்.

தேசம் கடந்து வாழ்ந்தாலும் வேர் விட்ட நிலத்தை மறக்க முடியுமா? என்பதுபோல புலம்பெயர் உறவுகள் தத்தம் குடும்பத்தோடு தாயகம் வந்திருப்பதும் நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தில் கலந்து கொள்வதும் ஆறுதலைத் தருவதாகும்.

அதேநேரம் இக் கடிதம் எழுத முனைந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் ஒன்று; இரட்டைப் பிரஜாவுரிமை என்ற விடயம் சம்பந்தமானது.

புலம்பெயர்ந்திருக்கக்கூடிய தமிழ் உறவுகளே! நீங்கள் அனைவரும் உங்களின் பிரஜாவுரிமையை தாயகத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள். இரட்டைப் பிரஜாவுரிமை என்ற நிபந்தனைகளின் கீழ் நீங்கள் இந்த நாட்டின் பிரஜாவுரிமையைப் பதிவு செய்வதன் மூலம் எங்கள் இனத்தின் சனத்தொகை அதிகரிப்பதுடன், வாக்காளர் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொள்ளும்.

அதேசமயம் புலம்பெயர் உறவுகளின் கைகளிலேயே எங்கள் தாயகத்தின் முதலீட்டு முயற்சிகள் இருப்பதால் உங்களின் முதலீடுகளை தாயகத்தில் மேற்கொள்வதற்கும் உங்களுக்குரிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் இரட்டைப் பிரஜாவுரிமையின் கீழ் பதிவு செய்வது அவசியமானதாகும்.

இன்றைக்கு எங்களிடம் இருக்கக்கூடிய பெரிய பிரச்சினை எங்கள் இனத்தின் சனத்தொகை வீழ்ச்சியாகும்.

நாட்டில் நடந்த யுத்தத்திற்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை காவு கொடுத்த கொடுமை ஒரு புறம்.

யுத்தத்தின் நெட்டூரத்தால் பிறந்த ஊரில் வாழ முடியாமல் வேரறுந்து புலம்பெயர்ந்த உறவுகள் மறுபுறமாக எங்கள் தமிழினத்தின் மக்கள் தொகையை சிறுபான்மையாகி விட்டது.

இதற்கு மேலாக தாயகத்தில் வாழ்கின்றவர்களும் ஒரு குழந்தை, இரு குழந்தை போதும் என்று எல்லைப்படுத்தி விட, எங்கள் பின்னின்ற முஸ்லிம் சகோதரர்கள் இன்னும் ஒரு சில வருடங்களில் எங்களை முந்தி சிங்கள மக்களை நெருங்கும் அளவுக்கு வந்துவிடுவர்.

ஆகையால் அன்புக்குரிய புலம்பெயர் உறவுகளே! இரட்டைப் பிரஜாவுரிமையின் கீழ் உங்களை இந்த நாட்டின் பிரஜைகளாகப் பதிவு செய்வதானது எங்கள் இனத்தின் இருப்பை உறுதி செய்வதற்கு பேருதவியாக அமையும்.

இவை யாவற்றுக்கும் மேலாக, புலம்பெயர்ந்திருக்கும் நீங்கள் இங்கு பிரஜாவுரிமைப் பதிவு செய்வதனூடாக உங்கள் பிள்ளைகளுக்கும் எங்களுக்குமான உறவும் பலப்பட்டுக் கொள்ளும்.

தாயகத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் உங்கள் பிள்ளைகள் நீங்கள் வாழும் புலம்பெயர் நாட்டில் பிறந்தவர்கள். எனவே அவர்களை தாயகத்துடன் இணைத்து விடத் தவறினால் அவர்களுக்கும் எங்களுக்குமான நெருக்கம்-உறவு என அனைத்தும் வேரறுந்து போகும்.

ஆகையால் உங்கள் பிள்ளைகளின் தொடர்பை தாயகத்துடன் நெருக்கமாக்கி விடுவது உங்களின் கடமையாகும்.

இதைச் செய்யும் அதேவேளை உங்களிடம் கேட்கும் இரண்டாவது உதவி, உங்கள் பிள்ளைகளுக்கு எம் தாய்மொழியாம் தமிழைப் போதித்து விடுங்கள். அது தமிழனை-தமிழை உலகம் எங்கும் வாழவைக்கும். தாயகத்தையும் உலகத்தையும் ஒன்றிணைக்கும். இதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக் கடிதத்தை நிறைவுபடுத்துகின்றேன்.

## நல்லாட்சி எனக் கூறினாலும் எமக்கான முன்னேற்றம் இல்லை
### வடக்கு விவசாய அமைச்சர் விசனம்

(கொழும்பு)

புதிய அரசின் பொய்யான பெயர்புனைவுகளுக்கு பின்னால் எம்மவர்கள் பலரும் இழுபட்டு செல்வது தற்போதுள்ள துயரமான சம்பவமாகும் என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

செஞ்சோலை சிறுவர்இல்ல குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டு 10 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றுமுன்தினம் யாழில் அனுஷ்டிக்கப் பட்டது. அதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை அரசின் போர் விமான தாக்குதலில் செஞ்சோலை வளாகத்தில் கல்வி சார்ந்த நடவடிக்கைக்காக கூடியிருந்த போது 61 இளம் குருத்துக்கள் துடிதுடித்து பலியாகின. இவ்வாறு இலங்கை அரசினால் மேற்கொண்ட படுகொலை செய்யப்பட்ட அவர்கள் இனப்படுகொலையின் அத்தியாயமாக எழுதப்பட்ட இந்த சிறுவர்களின் படுகொலையை வேறு விதமாக திரிவுபடுத்தினார்கள். உயிரிழந்தவர்கள் விடுதலைப்புலிகளின் குழந்தை போராளிகள் என தெரிவித்தார்கள்.

இச்சம்பவத்தின் பின்னர் இடைப்பட்ட 10 ஆண்டுகளில் தமிழ்த் தேசியம் சார்ந்த விடுதலை சார்பாக அல்லது இனத்தின் விடுதலை சார்பாக நாம் கொஞ்சமாவது முன்னேறி இருந்தால் அது தான் நாம் இந்த குழந்தைகளுக்கு செலுத்தும் அஞ்சலி ஆகும். ஆனால் கொஞ்சமும் முன்னேறவில்லை.

வண்டிலுக்கு முன்னால் கட்ட வேண்டிய மாட்டை வண்டிலுக்கு பின்னால் கட்டி நல்லிணக்கம் தான் முதலில அதன் பிறகுதான் இனப் பிரச்சினைக்கு தீர்வு என்பது போல இந்த அரசு தனக்கு தானே நல்லாட்சி அரசு என்ற பேர் சூட்டிக்கொண்டு செயற்பட்டு வருகிறது

இந்த பொய்யான பெயர் புனைவுகளுக்கு பின்னால் எம்மவர்கள் பலரும் இழுபட்டு செல்கிறார்கள் என்பது தான் இன்றுள்ள துயரமான சம்பவமாக உள்ளது.

உண்மையான அஞ்சலி என்பது எமது தமிழ் தேசியத்தின் விடுதலையை விரைவில் முன்னெடுக்க எம்மிடையே இருக்கும் பல்வேறு வேறுபாடுகளை கடந்து இங்குள்ள பொய் மான்களை அம்பலப்படுத்தி முன்னேற வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## உலக பொருளாதாரம் ஆசியா வசமாகும்

(கொழும்பு)

ஆசிய பிராந்தியம் விரைவில் உலகப் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது சீனாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அவர் சீனாவின் சொங் ஜிங்கின் மேயரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே, இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகள் விரைவில் உலகப் பொருளாதாரத்தில் வலுவான நிலையை எட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தித் திட்டம் குறித்தும் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (செ-11)

## நல்லூர்க்கந்தனுக்கு



### வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வம்

இராகம்: எதுகுலகாம்போதி தாளம்:மிஸ்ரம்

**பல்லவி**

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே
என் வினைப்பகைதீர் தெய்வமே

**அனுபல்லவி**

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன்
(வேலை)

**சரணம்**

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா (வேலை)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

## நல்லிணக்க மத்திய நிலையங்களாக விளையாட்டு மைதானங்கள் உள்ளன
### ஜனாதிபதி மைத்திரி உரை

(கொழும்பு)

இனம், சமயம், குலம், மொழி, நிற வேறுபாடுகள் இல்லாத விளையாட்டு மைதானங்கள் நல்லிணக்கத்திற்கான மத்திய நிலையங்களாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முற்பகல் எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டு நட்சத்திரங்கள் 2016 விளையாட்டு விழாவின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகளின் பங்குபற்றுகையுடன் இந்த விளையாட்டு நட்சத்திரங்கள் விளையாட்டு விழா நடைபெறுகின்றது.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி நல்லிணக்கத்தை வார்த்தைகளுக்குள் மட்டுப்படுத்திவிடாது நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக கடந்த ஒன்றரை வருடகாலமாக அரசாங்கம் கூடிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் மத்தியில் சமாதானம், ஐக்கியம், சகோதரத்துவம் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி நாட்டை முன்னேற்றுவதற்காக விளையாட்டுத்துறையினால் பெற்றுக்கொடுக்க முடியுமான பங்களிப்புகள் மிகவும் கூடியதாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த வகையில் நாட்டில் ஒன்பது மாகாணங்களிலுமுள்ள நகர மற்றும் கிராமப்புற விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தி அவை எல்லாவற்றையும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான மத்திய நிலையங்களாக அமைக்கவுள்ளதாகவும ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அதிகாரிகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய உச்சபட்சமான வரப்பிரசாதங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டிலுள்ள எல்லா விளையாட்டு வீரர்களும் அவர்களது திறமைகள், இயலுமைகளினூடாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியான வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விளையாட்டுத் துறையின் எல்லா பிரிவுகளையும் முன்னேற்றவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமது சேவைக்காலப் பகுதியில் திறமைகளை வெளிப்படுத்திய ஓய்வுபெற்ற 10 விளையாட்டுத்துறை அதிகாரிகளுக்கு இதன்போது ஜனாதிபதியினால் விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அமைச்சர் தலதா அத்துகோரல, பிரதி அமைச்சர் துனேஷ் கன்கந்த, சப்பிரகமுவ மாகாண ஆளுநர் மார்சல் பெரேரா, முதலமைச்சர் மகிபால ஹேரத், சப்பிரகமுக மாகாண விளையாட்டு த்துறை அமைச்சர் அத்துலகுமார ராகுபத்த ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இரகசியமாகப் பிறரைக் குறைகூறுவது பாவம் என்றறிவாய். அதை முழுதும் நீ நீக்க வேண்டும். மனத்தில் பல நினைவுகள் எழ லாம். ஆனால் அவற்றை வெளியிட முயன் றால் அது மெல்ல மெல்லத் தினையள வைப் பனையளவாக்கும். மன்னித்து மறப்பாயா னால் எல்லாம் முடிந்துவிடும்.

❖ வீண்வாதம் புரிய யாராவது உன்னிடம் வந்தால் மரியாதையாக உன்னை விலக்கிக்கொள். எல்லா நெறியிடமும் உனது அனுதாபத்தை வெளியிட வேண்டும். இந்த அடிப்படைக்குணங்கள் உன்னிடம் வெளிப்படத் தோன்றும் போதுதான் பேராற்றலோடு உழைக்கும் திறமை உனக்கு உண்டாகும்.

❖ குழந்தையின் கபடமற்ற தன்மையோடு ஆழ்ந்த யோசனையையும் இணைத்துக்கொள். அனைவருடனும் ஒத்துவாழ். ஆணவத்தை முழுவதும் ஒழித்துவிடு. ஒரு பக்கச்சார்பான கருத்துக்களுக்கு இடம் கொடுக்காதே. பயனற்ற வாதப்போர் பெரும் பாவத்தையே தரும்.

# பலாலி விண்மீன் அரை இறுதிக்கு தெரிவு



சிறந்த பந்துப் பரிமாற்றத்தால் 3 ஆவது நிமிடத்தில் துசி கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார். முதல் பாதியாட்டம் 1.1 என்ற ரீதியில் காணப்பட்டது. இரண்டாவது பாதியாட்டத்தில் விறுவிறுப்பாக ஆடியது. இரு அணிகளும் இரண்டாவது பாதியில் கோல் போடாத நிலையில் ஆட்டம் சம நிலையானது. போட்டியின் ஆட்ட நாயகன் விண்மீன் வி.க. வீரர் ரதன் தெரிவு செய்யப்பட்டார்.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான சுப்பர் 8 போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் டயமன்ஸ்சை எதிர்த்து பலாலி விண்மீன் மோதியது.

ஆட்டம் ஆரம்பித்த முதலாவது நிமிடத்தில் விண்மீன் வி.க. வீரர் யூட் கோல் போட்டார். பதிலுக்கு வதிரி டயமன்ஸ் வீரர் பிறேம்குமாரின்

போட்டி சமநிலையானதால் அரைஇறுதிக்கு தெரிவானது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம். (க)

# இமையாணன் மத்திய வி.கழக உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்



இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான சுப்பர் 8 உதைப்பந்தாட்ட போட்டியில்அண்மையில் நடைபெற்ற போட்டியில் ஞான முருகனைஎதிர்த்து குறிஞ்சிக்குமரன் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் ஞான முருகன் வி.க வீரர் தவரூபன் 24 ஆவது நிமிடத்தில் கோல் காப்பாளரை கடந்து கோல் போட்டு அசத்த முதல்பாதி 1.0 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் குறிஞ்சிக்குமரன் கழக வீரர் சோகேய் 53ஆவது நிமிடத்தில் கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார். இறுதிவரை வெற்றிக்காகப் போராடியது ஞான முருகன். இறுதி நேர முடிவில் 1.1 என்ற ஆட்டம் சம நிலையானது.

புள்ளிகள் அடிப்படையில் இரு அணிகளும் அரை இறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்ட நாயகன் குறிஞ்சிக்குமரன் வி.கழக வீரர் சோகேய் தெரிவு செய்யப்பட்டார்.(க)

# வொலிகிங்ஸ் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## இறுதிப்போட்டியில் வளர்மதி



கச்சாய் வொலிகிங்ஸ் வி. கழகத்தின் B பிரிவுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப்போட்டி யில் நீர்வேலி காமாட்சி அணியை 3:0(27:25, 25:13, 25: 22) என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது வளர்மதி விளையாட்டுக் கழகம். (க)

## பாரதி உதைபந்தாட்ட தொடர்


# சிறி அம்பாள் விளையாட்டுக்கழகம் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் மாதகல் சென். தோமஸ் அணியை எதிர்த்து விளையாடிய நாச்சிமார் கோவிலடி சிறி அம்பாள் வி.கழக 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கௌசிகன் ஹட்ரிக் சாதனை மல்லாகம் கிறீன்கிறாஸ் வெற்றி




மல்லாகம் சிறீமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் ஆரம்பமாகின.

குழு A ற்கான மூன்றாவது போட்டியில் அளவெட்டி T-90 விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மல்லாகம் கிறீன் கிறாஸ்விளையாட்டுக் கழகம் மோதியது. நாணய சுழற்சியில் வென்ற கிறீன்கிறாஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி T-90 வி.க. நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து மரிமாற்ற முடிவில் 3 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறீன் கிறாஸ் வி.க. 4.4 பந்துப் பரிமாற்ற நிறைவில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. மல்லாகம் கிறீன்கிறாஸ் வி.க. சார்பில் பந்து வீச்சில் ஹட்ரிக் முறையில் 3 இலக்குகளை கைப்பற்றிய கௌசிகன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (க)

# மல்லாகம் ஸ்ரீ முருகன் வி.கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடர்

## ஈகிள்ஸ் வெற்றி



மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் ஆரம்பமாகின.

குழு A ற்கான இரண்டாவது போட்டியில் உரும்பிராய் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணய சுழற்சியில் வென்ற புத்தூர் ஞான வைரவர் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து மரிமாற்ற முடிவில் 4 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புத்தூர் ஞான வைரவர் விளையாட்டுக் கழகம் 6 பந்துப் பரிமாற்ற நிறைவில் 3இலக்கினை இழந்து 31 ஓட்டங்களை மாத்திரம் பெற ஈகிள்ஸ் 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. உரும்பிராய் ஈகிள்ஸ் வி.க. சார்பில் துடுப்பாட்டத்தில் 30 ஓட்டங்களை பெற்ற சதீஸ் ஆட்ட நாயகனாக தெரிவானார். (க)

# புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக வடமாகாண ரீதியிலான கிரிக்கெட்

## இறுதிப்போட்டியில் உதயசூரியன்

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமாகாண ரீதியான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் முதலாவது போட்டியில் குப்பிளான் விளையாட்டுக்கழகத்தை வெற்றிபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 5ஓவர் நிறைவில் 68 ஓட்டங்களைப் பெற்றது இதில் பிரசாந் 31,காந்தன் 16, நிலக்ஷன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். எதிர்த்து ஆடிய குப்பிளான் அணி 41 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து நடைபெற்ற காலிறுதி போட்டியில்இணுவில்காமாட்சிஅணியை வெற்றி பெற்றது.இதில் முதலில் ஆடிய உதயசூரியன் அணி 5 ஓவர் நிறைவில் 42 ஓட்டங்களைப் பெற்றது. எதிர்த்து ஆடிய காமாட்சி அணி 24 ஓட்டங்களைப் பெற்றது. துளசி, சிறிதாஸ், சேருயன் சிறப்பான பந்து வீச்சின் உதவியுடன் அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது குரும்பைகடி உதய சூரியன் வி.கழகம். (க)

## அமெ.தூதுவர்...



யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்திருந்த இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேசப், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் முக்கிய சந்திப்புக்களை நடத்தியிருந்ததுடன் அமெரிக்காவின் ஒப்ரேஷன் பசுபிக் ஏஞ்சல் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைத்திருந்தார்.

நேற்று காலை இலங்கை விமானப்படைக்கு சொந்தமான விமானம் மூலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியராச்சி பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார். இதனை தொடர்ந்து காலை 8 மணியளவில் அமெரிக்க விமான படைக்கு சொந்தமான விமானம் மூலம் அமெரிக்க தூதுவர் அதுல் கேசப், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் மனோ கணேசன் ஆகியோர் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

தொடர்ந்து இவர்களை எதிர் கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோர் வரவேற்றிருந்தனர்.

மேலும் விமான நிலையத்தில் வைத்து ஐக்கிய அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பிரிவானது ஒப்ரேஷன் பசுபிக் ஏஞ்சல் வேலைத்திட்டத்திற்கான மருத்துவ பொருட்களை அமெரிக்க தூதுவர், எதிர்க்கட்சி தலைவர் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடம் கையளித்திருந்தனர். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இச் செயற்திட்டத்தின் கீழ் வைத்திய உபகரணங்களை அன்பளிப்பு செய்திருந்ததுடன் மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இதன்படி இச் செயற்பாடானது நேற்றைய தினம் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் இதில் ஐக்கிய அமெரிக்க இராணுவத்தினர் 60பேரும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தவர்களும் இலங்கை விமானப்படை அங்கத்தவர்களும் பங்குபற்றியிருந்ததுடன் அதன் செயற்பாடுகளை இவர்கள் ஆரம்பித்து வைத்து பார்வையிட்டிருந்தனர்.

அத்துடன் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் வடமாகாண பேரவை செயலகத்தில் வட மாகாணசபையின் உறுப்பினர்கள் அவைத்தலைவர் ஆகியோரை சந்தித்து அமெரிக்க தூதுவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

இச் சந்திப்புக்களை தொடர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். தொடர்ந்து அமெரிக்க தூதுவரினுடைய சந்திப்புக்கள் இன்றைய தினமும் யாழில் இடம்பெறவுள்ளது. (செ-4)

## வவுனியா...

பி.ஆர்.புஷ்பகுமார தலைமையில் கிராமியப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் வி.கேதீஸ்வரன் ஆகியோர் தலைமையில் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்தில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் வவுனியா விவசாய சங்கப் பிரதிநிதிகளும், வவுனியா மாவட்டத்தை தளமாகக்கொண்ட மக்கள் பிரதிநிதிகளும் பங்கேற்று, தத்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் அமைச்சர்களான பி.ஹரிசன், றிசாத் பதியுதீன் ஆகியோர் வவுனியா தேக்கவத்தைக்குச் சென்று பொருளாதார மையத்தை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கு தேக்கவத்தை மிகவும் பொருத்தமான இடமென உறுதிப்படுத்தப்பட்டு பின்னர் அமைச்சர்கள், அதிகாரிகள், விவசாயப் பிரதிநிதிகளுடன் மீண்டும் ஒரு கலந்துரையாடல் வவுனியா கச்சேரியில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் 27ஆம் திகதி அமைச்சர் பி.ஹரிசனுக்கும், விவசாய சங்கப் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

பொருளாதார மையத்தில் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதெனவும், எவ்வாறான் விளைபொருட்களை கொண்டு வருவது எனவும் கலந்துரையாடுவதற்காகவே விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா பொருளாதார மையத்தை தாண்டிக்குளத்தில் அமைப்பதா? அல்லது ஓமந்தையில் அமைப்பதா? என்ற சர்ச்சை ஏற்பட்டதனால் அமைச்சரவையிலும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடமும் இந்த விடயம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இறுதியாக ஓமந்தையில் ஒரு பொருளாதார மையமும், வவுனியாவில் இன்னுமொரு பொருளாதார மையமும் அமைப்பது என அறிவிக்கப்பட்டதை அடுத்தே தேக்கவத்தையில் வவுனியாவுக்கான பொருளாதர மையத்தை அமைப்பது என நேற்று இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் பி.ஹரிசன் வவுனியா பொருளாதார மையத்தை அமைப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்து பேதங்கள் நிலவிய போதும், தற்போது அவை தீர்க்கப்பட்டு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சுமுகமான தீர்வை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் இதற்கான பணிகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம் என தெரிவித்தார். (செ-15,281)

## குற்றமிழைத்தவர்...

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் குறித்த சட்டமூலத்தின் மூலம் மீண்டும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஏற்கெனவே நல்லிணக்க பொறிமுறை சம்மந்தமாக இலங்கையில் மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் நடைபெற்ற கருத்து பகிர்வு இன்னும் முடிவுறாமல் அதன் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படாத நிலையில் உள்ளது. இருந்தும் அரசாங்கம் மிக விரைவில் காணாமல் போனோர் அலுவலகம் சம்மந்தமான சட்ட மூலத்தை பாதிக்கப்பட்ட மக்களின் மற்றும் அது சம்பந்தமாக இயங்கும் அமைப்புகளின் கருத்து எதுவும் உள்வாங்கப்படாமல் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது மிகவும் வேதனை அளிக்கிறது. ஏற்கெனவே பரணகம காணாமல் போன அலுவலகம் இந்த வருடம் கடந்த மாதம் வரை பதிவுகளை மேற்கொண்டு தற்பொழுது அறிக்கையை புதிய ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்கள். ஆனால் கடந்த வருடம் ஜெனிவா கூட்டத்தொடரில் நிராகரிக்கப்பட்ட இந்த பரணகம அலுவலகத்தினை இயங்க அனுமதி அளித்த இந்த அரசாங்கம் மேலும் கால இழுத்தடிப்புக்கும் குற்றம் இழைத்தவர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இதனை திட்டம் இட்டு செய்து வருகிறது. அவர்களினால் பெறப்பட்ட 24000 முறைப்பாடுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் ஏதும் விசாரணையை நடத்தி ஒரு நபரை கூட கண்டுபிடித்தார்களா? என்று கேள்வி நிலையிலேயே உள்ளது . அவ்வாறான நிலையில் மீண்டும் அப்படிப்பட்ட எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத சட்டமூலம் உருவாக்கப்பட்டு மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளோம். இதற்கு எமது அரசியல் தெரிவாளர்கள் ஆதரவு வழங்கி ஏமாற்றப்பட்டுள்ளோம். எமக்கு இனத்தின் மேல் கட்டவிழ்த்து விட்டிருந்த விடப்பட்டுக்கொண்டிருக்கின்ற அனைத்து விடயத்திற்கும் மற்றும் சட்டரீதியற்ற இராணுவ பொலிஸ் கைதுகள், அரசாங்க தரப்பினால் கைது மற்றும் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டமை, ஆயுத குழுவின் மூலம், காணாமல் ஆக்கப்பட்டமை பற்றியும் நில ஆக்கிரமிப்பு பற்றியும் தேவையற்ற பௌத்த விகாரை மற்றும் புத்தர் நிலைகள் அமைத்தல் போன்றவற்றுக்கும் இராணுவமயமாக்கல் இந்த அரசாங்கத்தினால் மிகவும் திட்டமிட்டே நடைபெற்று வருகிறது. தெற்கில் உள்ள பேரினவாதிகள் இந்த சட்டமூலம் தமக்கும் பாதிப்பு என்று சொல்லி தமது அரசியல் லாபம் தேட முயலுகிறார்கள். முன்னை நாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்து வேடிக்கையாகவே உள்ளது. ஏனெனில் அவருடைய காலத்தில் நடைபெற்ற பல படுகொலைகள் காணாமல் போதல் போன்றவற்றுக்கு அவரும் பதில் சொல்ல வேண்டியே உள்ளது. தற்போதைய ஜனாதிபதி கூட காணாமல் போன அலுவலக சட்ட மூலத்தில் மூலம் எந்த ஒரு படையினரும் தண்டிக்க படமாட்டர்கள் என்ற கருத்தை முன் வைத்தமை இந்த சட்ட மூலத்தின் உண்மை தன்மையை எடுத்து காட்டுகிறது.

ஏற்கெனவே விச ஊசி சம்பந்தமாக பல அப்பாவி இளைஞர்கள் இறப்பதற்கு காரணம் தெரியாமை உள்ள நிலையில் திட்டமிட்ட இன அழிப்பு இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எவ்வாறு நல்லிணக்கம் பற்றி சிந்திக்க முடியும என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## பட்டா ரக...

களின் விபரங்களை நேற்றிரவு வரை வெளிப்படுத்தவில்லை.

இலுப்பைக்கடவை சந்தியில் பட்டா ரக வாகனத்தினை இடைமறித்த வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார், சாரதியிடம் ஆவணங்களை பரிசோதனை செய்து கொண்டிருந்த போது மடு திருத்தலத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டு ஆவணங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட பட்டா ரக வாகனத்துடன் மோதியுள்ளது.

இதன்போது பட்டா ரக வாகனத்தை சோதனைக்குட்படுத்திய வீதிப்போக்குவரத்து பிரிவு பொலிஸார் மற்றும் குறித்த வாகனத்தின் உரிமையாளர் ஆகிய மூவர் மீதும் குறித்த பட்டா ரக வாகனம் மோதியுள்ளது.

இதன்போது குறித்த மூவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் போது குறித்த பட்டா ரக வாகனத்தின் சாரதி உயிரிழந்தார்.

இந்த நிலையில் வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் அதிகாரிகள் இருவர் மற்றும் ஹயஸ ரக வாகனத்தில் பயணித்த யாழ் மறை மாவட்டத்தை சேர்ந்த அருட்தந்தை ஆகிய மூவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சை பலன் இன்றி வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.மேலும் ஒரு வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் அதிகாரி மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தில் காயமடைந்த யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக இலுப்பைக் கடவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## அமெரிக்காவின்...

சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் மாலை 4.50 மணி தொடக்கம் 6.00 மணி வரையில் யாழ்.நகரில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

இதன் நிறைவில் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் அவர் குறிப்பிடுகையில்,

இன்றைய தினம் (நேற்று) நடைபெற்றிருக்கும் இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கின்றது. தமிழ் மக்கள் விடயத்தில் அமெரிக்கா தொடர்ச்சியான பங்களிப்பை செலுத்தி வருகின்றது.

அதனடிப்படையில் 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையில் பல தீர மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஒத்ததான தீர்வினை தமிழர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கும், காணாமல் போனவர்கள் விடயம், மீள்குடியேற்ற விடயம், மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் விடயம் போன்றவற்றிலும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்வாதார மேம்பாட்டு விடயத்திலும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் பங்களிப்பு எமக்கு தொடர்ச்சியாக வேண்டும் என்பதை அமெரிக்கத் தூதுவரிடம் கேட்டிருக்கின்றோம் என்றார்.

இச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறீதரன், த.சித்தார்த்தன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவசக்தி ஆனந்தன், ஈ.சரவணபவன் ஆகியோருடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் அரசியல் கட்சி சார்ந்த ஒரு சில பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர். (செ-11)

## இராணுவ...

வொரு புத்தர் சிலைகள் தமிழர்களுடைய காணிகளில் திட்டமிட்டு வைக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டமிடல்கள் ஜனாதிபதிக்கும் தெரிந்திருக்கும் என சிவில் சமூகத்தினர் எடுத்து கூறினார்கள்.

இதற்கு பதிலளித்த அமெரிக்க தூதுவர், இவை தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியாது எனவும் காலப்போக்கில் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் கூறினார்.

தொடர்ந்து தமிழர்கள் மீது நடைபெற்ற யுத்த மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் எனவும் அதன் ஊடாகவே நீதியை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சிவில் சமூகத்தினர் வலியுறுத்தியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த அமெரிக்க தூதுவர், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது. எனினும் அடுத்த மார்ச் ஜெனிவா அமர்வில் இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் வேறு ஒரு நகர்வை அமெரிக்கா எடுக்க போவதாக கூறினார், எனினும் அந்த நகர்வு மென்போக்கானதா? கடும் போக்கானதா? என்பதனை அவர் கூறவில்லை.

மேலும் இங்கு இராணுவ அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஊடகங்கள் தொடந்தும் மிரட்டப்பட்டு கொண்டே உள்ளன. ஆகவே அரசாங்கம் கூறுவது போன்று இங்கு எந்த மாற்றமும் இடம்பெறவில்லை. விடுவிக்கப்பட்ட காணிகள் கூட மகிந்தவின் காலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகள்தான். எனவே எந்த மாற்றமும் நிகழாத இந்த அரசில் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நீதி கிடைக்காது என சுட்டிக்காட்டிய யாழ்.சிவில் சமுகத்தினர்,

சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே உறுதியான நம்பகமான தீர்வு ஒன்று கிடைக்கும் என்பதை வலியுறுத்தியிருந்தனர். இந்த சிவில் சமூகத்தில் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## வயோதிபப் பெண் மீது மோதியது ஹன்டர்

(கரணவாய்)

வீதியில் நடந்து சென்ற வயோதிபப் பெண மீது ஹன்டர் வாகனம் மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 8.45 மணியளவில் கொடிகாமம்-நெல்லியடி வீதி கோவில் சந்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக நெல்லியடிப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் யாக்கரு சந்தியல் வைத்து ஹன்டர் வாகனத்தையும் கைப்பற்றியதுடன் வாகன சாரதியையும் கைது செய்திருந்தனர்.

படுகாயமடைந்த வயோதிபப் பெண்மணி தொடர்ந்தும் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில இருப்பதனால் அவர் தொடர்பான பெயர்விபரங்களை நேற்று நள்ளிரவு வரை பெற்றுக் கொள்ளமுடியவில்லை. (செ-60)

## மீளவும் நாமல்...

மொன்றை பெற்றுக் கொள்வதற்காக, நிதி மோசடிகள் சம்பந்தமாக ஆராயும் விசேட பொலிஸ் குழு முன்பாக, நாமல் ராஜபக்ஷ அழைக்கப்பட்டார்.

வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்ட பொலிஸார், பின்னர் நாமல் ராஜபக்ஷவை கைது செய்தனர். நீதிமன்றத்தில் கருத்து தெரிவித்த பொலிஸார், சட்ட விரோதமாக சம்பாதித்த கறுப்பு பணத்தை பயன்படுத்தி நாமல் ராஜபக்ஷ ஹெலோகொப் எனும் நிறுவனத்தின் 45 மில்லியன் ரூபாய் பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்துள்ளதாக தெரிவித்தனர்.

சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டால், அதன் மூலம் விசாரணைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கருத்துக்களை ஆராய்ந்த நீதிபதி, சந்தேக நபர்களை எதிர்வரும் 22-ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-11)

## தயா மாஸ்டர்...

சாட்டில் அவர் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அவருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்ட நிலையில், இறுதியாக நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது தயா மாஸ்டருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது.

எனினும் நீதிமன்றம் விதித்த பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்ய தவறிய நிலையில், அன்றைய தினம் பிணையில் செல்வதற்கு அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்றைய தினம் பிணை நிபந்தனைகளை தயா மாஸ்டர் பூர்த்தி செய்ததை அடுத்து அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு அரச உத்தியோகத்தர்களை கொண்ட பிணையிலும் ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் செல்ல கடந்த வழக்கு விசாரணையின் போது நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

நான்கு அரச உத்தியோகத்தர்கள் நேற்று நீதிமன்றத்தில் கையொப்பமிட்டதுடன், பணமும் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட நிலையில் தயா மாஸ்டர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை தயா மாஸ்டர் தினமும் யாழ். பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணியில் இருந்து 12 மணி வரைக்குள் கையொப்பமிட வேண்டும் எனவும் வட மாகாணத்தை விட்டு வெளியில் செல்ல முடியாது என்று நீதிமன்றம் நிபந்தனைகளை விதித்துள்ளது. (செ-11)


V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
- நெல்லியடி • வல்வெட்டித்துறை

(C-5457)



கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைகளுக்கான இறுதிக் கருத்தரங்கு.

நாளை (17.08.2016) புதன்கிழமை காலை 9.30 தொடக்கம் 3 மணிவரை சனி, ஞாயிறு 9.30 - 3.30.

076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)


# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம்மா சிவசுப்பிரமணியம்

ஓய்வு நிலை அதிபர் - கிளி/ வட்டக்கச்சி தெற்கு (அ.த.க. பாடசாலை)
நெடுந்தீவு - வட்டக்கச்சி



நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல.908, கட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்த வரும் கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலையின் ஓய்வுநிலை அதிபருமாகிய திருமதி தங்கம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள் 2016.08.13 ஆம் திகதியன்று காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான கந்தையா-கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலம் சென்றவர்களான பரராஜசிங்கம் -இரத்தினம்மா தம்பதிகளின் மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான பேரம்பலம் பசுபதி, இலட்சுமி மற்றும் பொன்னுத்துரை, தர்மலிங்கம், காலம்சென்ற கனகமலர் மற்றும் லோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும்.

பாஸ்கரன் (தயா-லண்டன்) புஸ்பகரன் (ஜெயா-இத்தாலி), சோதீஸ்வரி (ஜெயந்தி-லண்டன்), சிவனேஸ்வரி (சாந்தி-லண்டன்), காலம்சென்ற திலகேஸ்வரி (வசந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதாம்பிகை (சசி-லண் டன்), பொன்மலர் (மாலா-இத்தாலி), சண்முகலிங்கம் (சத்தி-லண்டன்), பிரேம்குமார் (பிரேம்-லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும்

திவாகரன், ஜெபேசன், மிதுசா,சீதுசா, சுலக்சன், அனுசன், தனுஜா, வினுஜா, அபிஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2016.08.16 ஆம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வட்டக்கச்சியிலுள்ள சொந்த இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்

இல. 908, கட்சன் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி. (C-5449)

தகவல்
குடும்பத்தினர்
ப. சிவசுப்பிரமணியம் (கணவன்)
077 8315 183


பட்டதாரிகளுக்கான போட்டி பரீட்சை வகுப்புக்கள்

பட்டதாரிகளை ஆசிரிய நியமனத்திற்கு உள்வாங்குவதற்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம் :- 21/08/2016 காலை (10 மணி)

தொலைபேசி இல :-
021 222 8148, 077 3144 762
021 568 9477, 077 8469 721

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்.

(சி-5466)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



யாழ் புத்தகசாலையின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

நல்லூர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு அனைத்து விதமான இலங்கை இந்திய வெளியீடுகளுக்கு விஷேட விலைக்கழிவு

இடம்: யாழ் புத்தகசாலை பருத்தித்துறை வீதி, அரசடிச்சந்தி. (அன்னை நாகா பூட் சிற்றிக்கு அருகில்)

10% - 50%

காலம்: 08.08.2016 முதல் 08.09.2016 வரை
நேரம்: காலை 6 மணிமுதல் இரவு வரை
தரம் - 01 சுற்றாடல் வெளிவந்து விட்டது.
ஆசிரியர் : A.S.ஜெளபர் (2016 புதிய பாடத்திட்டம்)

(C-5459)

தொடர்புகளுக்கு: யாழ் புத்தகசாலை
பருத்தித்துறை வீதி (அரசடிச்சந்தி), நல்லூர், யாழ்ப்பாணம்.
021 492 7625, 021 221 7874, 077 834 9507



SINGER இடமிருந்து

BUDRY ELECTRONICS

சிறந்த விலைக்கு பத்ரி தராசு



உங்கள் வியாபாரத்தை முன்னேற்றிக் கொள்ள, நீங்களும் வாருங்கள்...

2016 ஆகஸ்ட் காலை 09.30 - இரவு 09.00 வரை

20 - 21 - 22 - 23

சிறந்த விலைக்கு பத்ரி தராசை பெற்றிடுங்கள்
யாழ்பாணம் - வீரசிங்கம் மண்டபத்தில் மட்டுமே

SINGER யாழ் FIESTA
ஓர் அற்புதமான அனுபவம்

(சி-5458)

BES - WP15 - ECO
011 5 400 400

ரூ. 15,999/- ரூ. 13,600/-

SINGER Plus


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.